1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 10-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் 13-ந் திகதி வியாழக்கிழமை— பிரதிசதம் 10

## முனிவர்க்குப் புகழ்மாலை

"மனிதர் மற்றஅர்ச்சியசிஷ்டர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும்உதவிகளில், கடவுள் அவ்வர்ச்சியசிஷ்டர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட வரத்தையே கொடுத்திருக்கிறார். ஆனல், என்அனுபவத்திலிருந்து நான் சொல்வது என்னவென்றால்: சகலகாரியங்களிலும், சகலவித உதவிகளையும் செய்யும்வரத்தையும், வல்லமையையும் தேவன் அர்ச். சூசையப்பருக்கு மட்டும் அநுக்கிரகித்திருக்கிறார் என்பதே. மனிதனுக அவதரித்த கடவுள் தம்மைவளர்த்த தகப்பனும், பாதுகாவலருமான சூசையப்பருக்குத் தாம் கீழ்ப்படிந்த முறையில் இப்பொழுதும் அவர் கேட்கும் சகலவிஷயங்களையும் பூர்த்திசெய்வதுநியாயந்தானே. அதனல் நான் அநேகரை அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்தைநாடிப் போகச்சொல்லியிருக்கிறேன்'' என்று அர்ச். தெரேசம்மாள் தனதுசொந்தச் சீவிய அனுபவத்திலிருந்து சொல்லியிருக்கிருள். ஆகவே,

அர்ச். சூசையப்பரிடம் போங்கள். அவர்சொல்வதைக்கேட்டுச் சுமுத்திரையாய்ச் செய்யுங்கள்.

அர்ச். சூசையப்பரிடம் போய் யேசுநாதரும், அர்ச். கன்னிமரியம்மாளும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தாற்போல் நீங்களும் கீழ்ப்படிந்து நடவுங்கள்.

அர்ச். சூசையப்பரிடம் போங்கள். அவர்கள் அவரிடம் பேசியதுபோல் நீங்களும் பேசுங்கள்.

அர்ச். சூசையப்பரிடம் போய் அவர்கள் அவருடைய ஆலோசனையைக் கேட்டதுபோல் நீங்களும் கேளுங்கள்.

அர்ச். சூசையப்பருக்கு அவர்கள் மரியாதை செய்ததுபோல் நீங்களும் மரியாதைசெய்யுங்கள்.

அர்ச். சூசையப்பரிடம் அவர்கள் நன்றியறிதலுள்ளவர்களாக இருந்ததுபோல் நீங்களும் உங்கள்நன்றியை என்றும் பாராட்டுங்கள்.

அர்ச். சூசையப்பரை அவர்கள் நேசித்ததுபோலும், இன்றும் நேசிப்பதுபோலும் நீங்களும் அவரைநேசியுங்கள்.

நீ உன்சீவனத்துக்காகக் கஷ்டப்பட்டு வேலைசெய்யவேண்டியிருந்தாலும், ஒருகுடும்பத்தைக் காப்பாற்றவேண்டியிருந்தாலும், தரித்திரதுன்பங்களால் வருந்தும்பொழுதும், வீட்டில் இருக்கையில் உன்மனம் பலவிதஇடைஞ்சல்களினல் சஞ்சலப்படும்பொழுதும், தாங்கமுடியாத சோதனைகளால் அலைக்கழிக்கப்படும்போதும், உன் விசுவாசம் கடுமையாய்ச்சோதிக்கப்படும்போதும், உன் எண்ணங்களும் நம்பிக்கைகளும் வீணய்ப் போய்விடுமென்று அங்கலாய்க்கும்போதும், யேசுநாதரையும், அர்ச். தேவமாதாவையும் அதிகமதிகமாய் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமானலும், நீ உனக்கு முன்மாதிரிகையாகவும், ஆசிரியராகவும், நல்லதகப்பனுராகவும் அர்ச். சூசையப்பரையே தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் அவரே சகலகாரியங்களிலும் சனங்களின் நல்ல தோழனுயிருக்கிறார். அர்ச். சூசையப்பர் யார்?

தெய்வீகமனிதனை வளர்க்கத் தெரிந்துகொள்ளப்பட்ட தகப்பனர் இவர்தான். (அர்ச். லூக்காஸ்)

மனுஷாவதாரத்தில் உண்மையுள்ள ஒத்துழைப்பாளி இவர்தான். (அர்ச். பேர்னட்)

இவருடையஅலுவல் மனுஷாவதாரத்தின் பரம இரகசியத்தைச் சார்ந்ததாயிருந்தது. (சுவாரஸ்)

திருக்குடும்பத்தின் எசமானனும், அதிகாரியும் இவரே. (அர்ச். பெனர்டின்)

அர்ச். கன்னிமரியாயிக்கு உகந்தபத்தாவாயிருக்கத் தகுதியானவர், மனிதர்களில்தெரிந்துகொள்ளப்பட்டவர் இவர் ஒருவரே. (அர்ச். கிறகோரியார்)

குழந்தையேசுவின் உயிரைக் காப்பாற்றி இரட்சித்தகைத்தாதை இவரே. (அர்ச். மத்தேயு)

மற்றயாவரையும்விட யேசுநாதராலும், தேவமாதாவாலும் அதிகமாய் நேசிக்கப்பட்டவர் இவரே. (அர்ச். இசிதோர்)

பூலோக திரித்துவத்தின் மூன்றுமாள் இவரே. (ஜெர்சன்)

கலியாணஅந்தஸ்தில் இருப்பவர்களின் பாதுகாவலர் இவரே. (பவுல்டிபால்)

இவரே தேவனுல்ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையின் பொக்கிஷதார். (சூசையப்பரின் மந்திரமாலை)

நன்மரணத்திற்குப் பாதுகாவலர் இவரே. (அர்ச். அல்போன்ஸ்)

கத்தோலிக்க சத்திய திருச்சபையின் பாதுகாவலரும் இவரே. (திரு. சங்)

## பயங்கர கேட்டின் பாதையிலே பறந்துசெல்லும் உலகம்

கல்தேயநாட்டின் அரசனுன பல்தசார்என்பவன் தனது பிரசைகளுக்குப் பெருவிருந்திட்டுக் களியாட்டுவிழா நடத்திக்கொண்டிருக்கும்போது, திடீரென ஓர் கரம்தோன்றி "மானே, தேசெல், பாறேஸ்'' என்றமொழிகளை அவனுக்கெதிரேயிருந்த சுவரில் வரைந்து மறைந்ததாம். பயப்பிராந்திபிடித்துக் கலங்கியிருந்த அவ்வேந்தனுக்குத் தீர்க்கதரிசியான தானியேல் அதன்அர்த்தத்தை விளங்கவைத்தார். அதாவது "தேவன் உனது இராச்சியத்தை மதிப்பிட்டு முடித்துவிட்டார். அவரின்தராசிலே நீ நிறுக்கப்பட்டுப் பேறுஅற்ற பதராகக் காணப்பட்டாய். உனது இராச்சியம் மேதியருக்கும், பார்சீகருக்கும் கையளிக்கப்பட்டிருக்கிறது'' என்பதே. தேவனை மதியாத அந்தஅகங்காரி அன்றிரவே தன்சத்துராதிகளால் கொல்லப்பட்டான்.

உலகமானது சென்றநூற்ருண்டுகளாகத் தனதுபிதாவும், சிருட்டிகருமான கடவுளைப் புறக்கணித்து, மறுதலிக்கத் தொடங்கி, தற்போது பூமி மனிதரின் அக்கிரமங்களினல் தேங்கிவழிகின்றது. அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும். தேவபிதாவுமோ பொறுத்தே பொறுத்துக் களைத்துப்போயினர். நிசிதசுக்போகங்களையும், உலகசெல்வங்களையும், அதிசாரமேட்டிமையையும், அகந்தையேஉருவான தங்கள்அறிவையும் தங்கள்தெய்வங்களாக மனிதர் ஏற்றுக்கொண்டு, தேவனையே வேண்டாமென்று தள்ளிவிட்டனர். சென்ற ஐம்பதுஆண்டுகளாக எத்தனைஎத்தனை விதமாகத்தான் எங்கள் திருமீட்பரும், அவரின் பரிசுத்ததாயாரும் வரப்போகும் பயங்கரமான தண்டனையைப்பற்றி அவர்களை எச்சரித்தார்கள்! லாசலேத், லூர்துபதி, பாத்திமா— இவைகளைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் யார்?

ஆனல், ஐயோ! மனிதர் காதிருந்தும் கேளாமலும், கண்ணிருந்தும் பாராமலும், அறிவிருந்தும்சிந்தியாமலும் தங்கள் இருதயங்களைக் கல்லாக்கி வைத்துக்கொண்டார்கள். ஆகவே, நீதியுள்ளபராபரன் இன்னும் பார்த்திருப்பாரா? இனிமேலும் பொறுத்தருளுவாரா? இல்லை, இல்லை, ஒருபோதுமில்லை! மன்னிப்பின்காலம் கடந்துவிட்டது. மனுக்குலத்தை அணைக்க ஆவலாய்நீட்டியிருந்த தேவகரம் அதை மண்ணுடன்மண்ணய் அடிக்க உயர்த்தப்பட்டிருக்கிறது. ஐயோ, பயங்கரமே! பாராளுமன்றங்களிலும், பிரமாண்டமான ஆலோசனைச்சங்கசாலைகளிலும், கோட்டைகொத்தளங்களிலும், யுத்தக்கப்பல்களிலும், யுத்தஆகாயவிமானங்களிலும் மாத்திரமல்ல, ஆனல், தெய்வத்தைமறைக்கும் சர்வகலாசாலைகளிலும்—மனிதர் உறையும் நகரிகளிலும், இல்லங்களிலுமே — மானே — தேசெல்— பாறேஸ்—என்ற பயங்கரமான தீர்ப்பு எழுதப்பட்டிருப்பதை நீ காண்கிறதில்லையா? தேவகோபதண்டனையை இடுவதற்கென அவரால் நிருபிக்கப்பட்ட தேவதூதர்கள் உருவியஅக்கினிவாள்களுடன் அணிவகுத்துவரும் பயங்கரதொனியை நீ கேட்கவில்லையா?

"என்ன! நீர் பெரியஞானவான், தூரதிருஷ்டி, தீர்க்கதரிசியைப்போல நடிக்கின்றீர்? சவுலும் தீர்க்கதரிசிகளுள் ஒருவராய்விட்டாரோ'' என்று நம்மை ஏழனம்செய்யாதேயும். வானத்தில் கருமுகில் குவிந்துள்ளது. பளீர்பளீரெனும் மின்னல். குமுறல் பேரிகைபோல் முழக்கம். விரைந்துஇரைந்து அடிக்கும் கொண்டல்காற்று. அப்படி இருக்கும்பொழுது, மழையும், புசலும், பெருவெள்ளமும் வருமென அறிவதற்குத் தூரதிருஷ்டியும், தீர்க்கதரிசனவரமும் வேண்டுமா? அதைப்பற்றிக் குதர்க்கமேன் ஐயா?

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

— நூ. அ. —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## பதின்மூன்று செவ்வாய்ப்பத்தி

கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரின் திருநாளாகிய ஆனிமாதம் 13-ந் திகதிக்குமுந்திய பதின்மூன்று செவ்வாய்க்கிழமைப்பக்தி நிகழும் பங்குனிமாசம் 18-ந்திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது என்பதை அவரது பக்தகோடிகளெல்லாம் அறிந்துகொள்வார்களாக!

## மத்தியகிளேறிக்கல் பரீட்சை

(1) பொதுக் கிளேறிக்கல், றெயில்வே, போஸ்றல், துறைமுகக் கிளேறிக்கல் சேவைகளையும், (2) போஸ்ற்மாஸ்றர்மார், சிக்னலர்களின் சேவையையும் அடக்கிய மத்திய கிளேறிக்கல் பரீட்சையொன்று ஆண் பிள்ளைகளுக்கென வருகிறஆனிமாதம் 13-ம் 14-ந் திகதிகளிலே கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு எனுமிடங்களிலே நடத்தப்படவிருக்கிறது. இப்பரீட்சைக்குச் செல்லவிரும்புகிறவர்கள் தங்கள் மனுப்பத்திரங்களை வருகிறசித்திரைமாதம் 7-ந்திகதியன்று அல்லது அதற்குமுன்பரீட்சைக்கம்மிஷனர், மலாய்வீதி, சிலேவ்ஐலன்ட், கொழும்பு எனும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும். மாதிரி மனுப்பத்திரங்களை அவரிடமிருந்து நிகழும் பங்குனி 31-ந் திகதி வரையில் பெற்றுக்கொள்ளலாம். இப்பரீட்சைபற்றிய விபரங்கள் 7-3-52-இல் வெளியான கெசற்றில் வெளிவந்திருக்கின்றன.

## பிரதம நீதியரசர்

இலங்கைப் பிரதமநீதியரசரான சேர் அலன்ரோஸ்அவர்கள் ஐக்றிங் கவர்னர்-ஜெனறலாகப் பதவியேற்றமையாலே இம்மாசம் 6-ந் திகதி தொடக்கம் அவரிடமாகப் பிரதமநீதியரசராகக் கடமைபார்க்கும்படி உபநீதியரசர் செல்லப்பா நாகலிங்கம் அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

## மற்றிக்குலேஷன் பரீட்சை

இலங்கையிலே லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சைக்குச்சமமான மற்றோர்பரீட்சையை இவ்வருடம் கார்த்திகைமாதமுதல் நடத்துவதென்று அரசாங்க கல்விப்பகுதி தீர்மானித்திருக்கிறது. இது பொதுத்தராதரப் பத்திர பரீட்சையென்று அறியப்படும். இப்பரீட்சைக்குப் பாடசாலைகளிலிருந்தும், பிரத்தியேகமாகவும் மாணவர் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இலங்கைச்சர்வகலாசாலையில் ஏற்றுக்கொள்ளப்படாத ஆயிரக்கணக்கான மாணவர்கள் லண்டன்சர்வகலாசாலைப் பட்டங்களைப்பெற்றுக்கொள்ள வசதியளிக்கும்நோக்கமாகவே கல்விப்பகுதி இவ்விததீர்மானத்துக்கு வாலாயிற்று. 1950-ம் ஆண்டு லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சை நீக்கப்பட்டது முதல் லண்டன்சர்வகலாசாலைப் பட்டப்பரீட்சைகளுக்கு மாணவர்கள் செல்லாது தடுக்கப்பட்டிருந்தார்கள்.

## மகாராணியின் ஜனனதினம்

இரண்டாவதுஎலிசபேத் மகாராணியாரின் பிறந்ததினம் உத்தியோகபூர்வமாக வருகிறஆனிமாதம் 5-ந் திகதி கொண்டாடப்படவேண்டுமென ஏற்பாடாகியிருக்கிறது. ஆனால், மகாராணியார் பிறந்ததினம் சித்திரைமாதம் 21-ந் திகதியாகும். உத்தியோகபூர்வமாகக் கோடைகாலத்திலே பிரித்தானியிலும், சாம்பிராச்சியநாடுகளிலும் அரசஜனனதினத்தைக் கொண்டாடுவதற்கென ஓர் திகதியைக்குறிப்பது வழக்கம். வருடந்தோறும் மகாராணியாரின் பிறந்ததினம் ஆனிமாதஆரம்பத்தில்வரும் முதல் வியாழக்கிழமையன்று கொண்டாடப்படுமென லண்டன்கெசற்றில் அறிவிக்கப்பட்டிருக்கிறது

## மற்றோர் புதியடக்றர்

மானிப்பாயிலுள்ள கிறீன் ஞாபக ஆஸ்பத்திரியிலே கடமைபார்க்கவென்று மற்றுமோர்புதியடக்றர் வந்து சேர்ந்திருக்கின்றார். இவர் சென்னைச் சர்வகலாசாலையில் எம். பி. பி. எஸ். எனும் வைத்தியபட்டம் பெற்றவர். அங்குள்ள அரசினர்ஆஸ்பத்திரிகளுள் ஒன்றிலே வைத்தியசேவைபுரிந்து அனுபவம்பெற்றவர்.

## புதிய லோஞ்ச் வருகிறது

இலங்கையின் வடகரைகளிலே வள்ளங்கள் ஆதியனமூலம் களவாகச் சாமான்களை ஏற்றியிறக்குகிறவர்களையும், களவிலேவந்து குடியேறுகிறவர்களையும் கண்டுபிடிப்பதற்கென்று லேடிஹூசில்லேஎனும் தீவிரகெதியுள்ள இரட்டைஸ்குறு லோஞ்ச் பாவிக்கப்படவிருக்கிறது. கொழும்புத் துறைமுகத்திலே முற்றிலும் திரும்பக்கட்டப்பட்ட இந்தலோஞ்ச் இவ்வாரம் வடகடல்களுக்கு வரவிருக்கின்றது.

## பஸ்விபத்து

கிழக்குப்பகுதிப் பஸ்கம்பெனியைச் சேர்ந்ததாய்த் திரிகோணமலைக்கும், மட்டக்களப்புக்குமிடையே போக்குவரத்துநடத்திவந்த விசேஷபஸ்வண்டி சென்றஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பனிச்சங்கேணிக்கும், மான்கேணிக்குமிடையிலே முப்பதாவதுமைல் கட்டைக்குச்சமீபமாகப் பாதையைவிட்டு விலகி ஓர் மரத்திற்போய் மோதியமையால் அதிலேசென்ற 25 பிரயாணிகளில் 23 பேரும் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் கிராமத்தலைமைக்காரர் இருவரும் அடங்குவார்கள்.

## மகிமைப்பட்ட மனு

குருநாகல் பெரும்பிரிவைச்சேர்ந்த கிராமத்தலைமைக்காரர் அங்கு மெல்சிறிப்புரத்து மலியதேவா கல்லூரியில் ஓர்கூட்டங்கூடி, அதிலே அரசாங்கத்துக்குச் சிறந்தசேவை ஆற்றியிருக்கும் கிராமத்தலைமைக்காரருக்கு மகிமைப்பட்டங்கள்வழங்குமாறு அரசினருக்கு மனுப்பண்ணியிருக்கின்றனர். அத்துடன் இதற்கெனஅவர்கள் ஐந்துதலைமைக்காரரின் நாமங்களையும் அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்திருக்கின்றனர். ஆமாம், எல்லாரும்பொன் பூண...

## சனங்களை எச்சரிக்கின்றார்

"தாங்கள் அதிகாரம்வகித்து அரசியல்நடத்துமாறு பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்து அனுப்பப்பட்டால், நடத்திவைக்க முடியவேமுடியாத திட்டங்களையும் தாங்கள் நடத்திமுடிப்பதாக வாக்களித்து நாட்டின்சமாதானத்தைக் குழப்பமுயற்சிக்கின்ற கம்யூனிஸ்த, சமசமாஜகட்சிகளையும், ஏனைய கட்சிகளையும்பற்றிக் கவனமாயிருங்கள்" என்று திரு. ஆர்னல்ட் இரத்நாயகஅவர்கள் லுனுவில் எனுமிடத்தில் நடந்தகூட்டமொன்றிலே சகலரையும் எச்சரித்திருக்கின்றார். மேலும்அவர்பேசியபோது: "யூ. என். பி. அரசாங்கம் அரசுநடத்தியுள்ள நான்குவருடமாகிய ஒருசொற்பகாலத்திலே இந்தநாட்டின் சேமத்திற்காகவும், நல்வாழ்விற்காகவும் மகத்தான சேவை ஆற்றியிருக்கிறது" எனக் கூறலாயினர்.

## பீடித்தீர்வை வருமானம்

இந்தியாவிலிருந்து இறக்குமதியான பீடிகளுக்குத் தீர்வைப்பணமாக நமது அரசினருக்குச் சென்ற 1951-ம் ஆண்டிலே கிடைத்தவருமானம் முந்திய வருடத்திலும் 20 லட்சம் ரூபாவால் அதிகரித்திருக்கின்றது. 1951-ம் ஆண்டிலே 8,65,000 றுத்தல்பீடி இறக்குமதியானதற்குப்பதில் சென்ற1951-ம் ஆண்டிலே 12,63,000 றுத்தல் பீடி இறக்குமதியாயிற்று. இவ்விதம் பீடி இறக்குமதி அதிகரிக்கக்காரணம் வடபகுதியிலே களவாகப் பீடிகள்வந்திறக்குமதியாகாமல் ரேகுத்தடைஅதிகாரிகள் எடுத்துக்கொண்ட கடுமையானநடவடிக்கையேஎன்று சொல்லப்படுகிறது.

## விருதுகள் பெற்றவர்கள்

கொழும்புப் பொருட்காட்சியிலே குடிசைக்கைத்தொழில், கைப்பணி மண்டபத்திலே சிறந்த வேலைப்பாடுடைய ஆபரணங்கள்செய்து காட்சிக்குவைத்த யாழ்ப்பாணத்தவர்களிலே தங்க, வெள்ளி மெடல்கள் பெற்றவர்களின் நாமங்கள் [illegible]: தங்க மெடல்—[illegible]யா, எஸ். காசிநாதர். வெள்ளிமெடல்—எஸ். காசிநாதர், கே. வேலுப்பிள்ளை, கே. நவரத்தினம். வெண்கலமெடல் — எஸ். கணேசன்.

# விசித்திரப் பிறவி

"விமலா ஒரு விசித்திரப் பெண்" என்றுதான் அந்தக்கிராமத்தவர் எல்லோரும் சொல்லிக் கொள்வார்கள். எல்லோரையும் பார்க்க ஞானசீலன்தான் "அவள் ஒருவிசித்திரப்பெண்" என்று திடமாகச்சொல்வான். அதற்கு அவன் கூறும் காரணம்:

விமலா இந்தக்காலத்து நாகரீக நாரீமணிகளைப்போல் இராது அடக்கமான உடைகளை அணிந்தாள். அடக்கமாக நடந்தாள். இந்தக்காலத்துப் பல பெண்களைப்போல் 'பூச்சுப்பொம்மை'களாகஇல்லாமல் அழகாகஇருந்தாள். அவளுக்கு அநேகம் சிநேகிதிகள் இருக்கவில்லை. ஒன்றிரண்டு பேர்தான். கோவிலுக்கு அல்லது பாடசாலைக்குப் போகும் அல்லது வரும்வழியில்தவிர வேறுசமயங்களில் அவளைக்காணமுடியாது. இவ்வளவும் சேர்ந்து அவளை ஒரு விசித்திரப் பிறவியாக்கிவிட்டன. பகட்டும், படாடோபமும் நிறைந்த இந்நாட்களில் விமலாபோன்றபெண்கள் விசித்திரப்பிறவிகளாவதில் என்ன அதிசயம்?

ஞானசீலன் விமலாவீட்டுக்குப் பக்கத்துவீட்டுக்காரன். அவனுக்கு விமலாவின் போக்கு நன்றாகப்பிடித்திருந்தது. அதனால் அவனுக்கு அவள்மேல் ஒருகண். கடைசியில் அவளைமணந்து கொண்டான். ஆனால், அவன் எதிர்பார்த்ததுபோல் அவர்கள் வாழ்க்கை உல்லாசமானதாய் இருக்கவில்லை. குடும்பவாழ்வு கசப்பதற்குப் பலகாரணங்கள் உண்டல்லவா? கடவுளுக்காக அவன் பொறுமையுடன் சகித்துவந்தான். சகிக்கமுடியாத பலதுன்பங்களைச் சந்தோஷமாகச்சகித்தான் கடவுளுக்காக. ஒரு வருடமாக அவன் வாழ்வு துன்பச்சுழலாக இருந்தது. ஈற்றில் அந்த அழகி காசநோயால் இறந்தாள். இல்லை, சோதித்தது போதும்என்று இறைவன் அவளை எடுத்துக்கொண்டான் போலும்.

வாழ்க்கை என்னும் வண்டியை ஒருங்குசேர்ந்து இழுத்துச்செல்லும் கணவன்-மனைவி என்ற இருவரில் ஒருவர் பிரிந்தால் எவ்வளவுதுன்பம்? ஞானசீலன் தன்வாழ்க்கைப் படகுக்குத் தான்மட்டும் தனியனாகத் துடுப்புப்போட நேரும்என்று எதிர்பார்க்கவில்லை. வாழ்வு கசந்தது. கடவுளை மறந்தான். எங்கெல்லாமோ அலைந்து திரிந்தான். முடிவில் விமலாவின்ஊரில் கால்வைத்தான். விமலாவின் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள தனதுவீட்டிலே திரும்பவும் வசிக்கத்தொடங்கினான். சிலகாலம்அந்தஊரைவிட்டுப் புறப்படுவதில்லைஎன்று தீர்மானித்துவிட்டான். விமலாதான் இதற்குக்கால். ஒரு குறியுமின்றி வாழ்ந்த ஞானசீலனை ஒரு ஞானசீலனாக்கினாள் விமலா. இந்தமகத்தான செயலை அவள் ஒரு வார்த்தைகூடப்பேசாது செய்துமுடித்தாள். பேச்சிலும் பார்க்கச் செயலுக்குத்தான் எவ்வளவுசக்தி?

ஞானசீலனுக்குக் காலையில் நேரத்தோடு எழும் வழக்கமுண்டு. முன்னரெல்லாம் அவன் சூரியோதயத்தைப் பார்த்து ரசிப்பதுவழக்கம். "இயற்கை எவ்வளவு அழகானது. அதன்சிருட்டிகர்த்தாவான இறைவன் எவ்வளவுவல்லவர். சில முட்டாள்விஞ்ஞானிகள் என்னென்னவோ எல்லாம் உளறுகிறார்களே. அவர்களால் யந்திரங்களைத் தவிர வேறென்ன செய்யமுடியும்?" என்றெல்லாம் அவன்சிந்திப்பது வழக்கம். ஆனால், இப்போதெல்லாம் அந்த ரசிகத்தன்மையை மறந்து விட்டிருந்தான். நேரத்தோடு துயில்நீத்து எழும் பழக்கம்மட்டும் அவனைவிட்டுப் போகவில்லை.

தனதுவீட்டில் தங்கிய அன்று அவன் வழக்கம்போல் எழுந்தான். எங்கும்ஒரே இருள். ஆனால்,விமலாவின் வீட்டுயன்னல் திறந்திருந்தது. உள்ளே வெளிச்சம் தெரிந்தது. அங்கே பாடுபட்ட சுரூபம்ஒன்று இரண்டு மெழுகுவர்த்திகளின் நடுவில்இருந்தது. எதிரே ஒருபெண். ஆம், அவள்தான் விமலா. முழங்காலில்இருந்துசெபித்துக்கொண்டிருந்தாள். ஞானசீலனுக்கு இது ஆச்சரியத்தைக் கொடுத்தது. இது கனவோ அல்லது நினைவுதானோ என்று முதலாய் எண்ணிவிட்டான். "விசித்திரப்பிறவி" என்று அவன்வாய் முணுமுணுத்தது. அந்த யன்னலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எண்ணம் எங்கெல்லாமோ சுழன்றது. எவ்வளவுநேரம் அப்படிஇருந்தானோ அவனுக்கே தெரியாது. கோவில் மணி அவன்காதில் ஒலித்தது. மீண்டும் அந்தயன்னலை நோக்கினான். அங்கே அவள்—விமலா—இல்லை. கதவைத்திறந்து கொண்டு வெளியே புறப்பட்டான். அவன் முன்னே ஒருபெண் உருவம் சென்றுகொண்டிருந்தது. கொஞ்சம் விரைவாக நடந்து அந்தப்பெண்ணைப்பின் தொடர்ந்தான். அவள்தான் விமலா.

"இவ்வளவு நேரத்தோடு எங்கே போகிறாள்?" — சிந்தனைத் திரையில் ஒரு கேள்விக்குறி. பதிலுக்கு அவன் கால்கள் அவளைப்பின் தொடர்ந்தன.

அவள் கோயிலுக்குள்ளே சென்றாள். ஏமாற்றத்தோடு அசைவற்று வெளியே நின்று கோவிலை வெறித்துப் பார்த்தான் ஞானசீலன். எண்ண அலைகள் அவன் வாழ்க்கையின் மறுகரையில்—இறந்த காலத்தில்—சென்றுமோதின. "முன்னொருகால் நீ எவ்வளவு பக்தி உள்ளவனாய் இருந்தாய். அப்போதெல்லாம் நீ மனச்சமாதானத்தோடு வாழவில்லையா? உன் மனைவியுடன் சோகசாகரத்தில் அமிழ்ந்தியபோது கடவுள் நம்பிக்கை உனக்கு மிதப்புப் பலகையாக இருக்கவில்லையா? இப்போது ஏன் மறந்துவிட்டாய்?"— கேள்விக்குமேல் கேள்விகேட்டு அவனை வதைத்தது அவன் மனச்சாட்சி—ஆண்டவன் ஒலி. கோவிலுக்குள்ளே அவன் சென்றான். பூசைக்குக் குருவானவர் ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார். அன்று அவன் மனம் சாந்தி அடைந்தது.

அவன் "விமலா ஒரு விசித்திரப் பெண்" என்று சொல்வதை நாம் ஆட்சேபிக்க முடியுமா? இப்படி ஒரு பெண் இருந்தாள்......

(எல்லாம் கற்பனை.)


## சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### திருச்சபையின் செனற்சபை

"திருச்சபையின் செனற்சபை" என அறியப்படுகின்ற கருதினால்மார் திருச்சங்கத்தைப் பற்றிய சிலவிபரங்களை அறிய வருவது கத்தோலிக்கருக்குப் பெருமகிழ்ச்சியைத்தருவதாகும். கருதினால்மாருள்ளே கருதினால் மேற்றிராணிமார், கருதினால்குருமார், கருதினால் தியாக்கோன்மாரென மூன்று பிரிவினர் இருக்கின்றனர். தற்போது சீவந்தராயிருக்கும் 49 கருதினால்மாருள்ளும் 2 பேர் 10-ம்பத்திநாத பாப்பானவராலும், 22 பேர் 11-ம்பத்திநாத பாப்பானவராலும், 25 பேர் 12-ம்பத்திநாத பாப்பரசராலும் கருதினால்மாராக ஆக்கப்பெற்றனர். இவர்களில் இத்தாலியர் 18 பேர். அமெரிக்கர் 3. ஆர்ஜென்ரீனியர் 2. ஆர்மீனியர் 1. ஆஸ்திறேலியர் 1. பெல்ஜியர் 1. பிறேசிலியர் 2. கனடியர் 1. சிலியர் 1. சீனர் 1. கியூபாதீவினர் 1. டச்சுக்காரர் 1. ஆங்கிலேயர் 1. பிரான்சியர் 5. ஜேர்மனியர் 2. ஹங்கேரியர் 1. பெருவியர் 1. போலிஷ்காரர் 1. போர்த்துக்கேயர் 2. ஸ்பானியர் 2. சீரியர் 1. (இவர்களில் அமெரிக்கர் ஒருவரும், போலிஷ்காரரான ஒரேயொருவரும் சமீபகாலத்தில் இறந்துபோனார்கள்.

### இரண்டாவது மிஷன்தினம்

அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களது வேண்டுகோளின்பேரிலே பிரித்தானிய தேசமுழுவதிலும் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் சென்ற மாசிமாதம் 1-ந்திகதி வெள்ளிக்கிழமையை முதன்முறையாகத் திருப்பாலத்துவசபைத் தினமாகக்கொண்டாடினார்கள். அன்று தினம் அவர்கள் திவ்வியபூசை கண்டும், விசேஷஆராதனையுடன்கூடிய திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துக்குச் சமுகங்கொடுத்தும், விசேஷசெபங்கள் செய்தும் அந்நாளை வேதபோதகநாடுகளுக்கான ஓர் செபத்தின்நாளாகச் செலவிட்டார்கள். "வேதபோதக நாடுகளிலுள்ள அஞ்ஞானப்பிள்ளைகள் எல்லோரினதும் ஆத்துமங்களுக்காக நடத்தும் இந்தப்புனித யுத்தத்திலே தேவரீருடையகொடியின் கீழ் நின்று போராடுவதாக இன்றுதினம் நாங்கள் வாக்குத்தத்தஞ் செய்கின்றோம்" என்றும், "கர்த்தரான யேசுவே! வெற்றியின் வழியே எங்கள் கொடியைக் கொண்டுநடத்தும். உமக்காகப் போராடுவதாகவும், உமக்காகப் பாடுபடுவதாகவும், உமக்காக உலகத்தை வெற்றிகொள்வதாகவும் நாங்கள் இன்றுதினம் உறுதிவாக்களிக்கிறோம்" என்றும் இருசெபங்களைச்செய்து அவர்கள் தங்களை அர்ப்பணஞ் செய்துகொண்டார்கள். இந்நாளை "இரண்டாவது உலகமிஷன் தினம்" என்று விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் தலைவரான கருதினால் புமாசோனி பயொந்தி ஆண்டவர் அழைத்திருக்கின்றார்.

### வேதசாட்சிகளின் நகரம்

கம்யூனிஸ்தர்கள் நடத்திய ஸ்பானிய உள்நாட்டுயுத்தத்தின்போது எத்தனையோபேர் வேதசாட்சிகளாகக் கொலையுண்டு அவர்களின் புனிதகுருதி சுவறப்பெற்ற ஸ்பானியநகரங்களில் மிகமுக்கியமானது, அடுத்த சர்வதேசசற்பிரசாத மகாநாடு நிகழவிருக்கும் பார்சலோனாநகரம். இறாநிற்று மேற்றிராணியாரும், நூற்றுக்கணக்கான குருமார், கன்னியாஸ்திரீமாரும் அந்நகரிலே கம்யூனிஸ்தர்களால் கொலைசெய்யப்பட்டார்கள். அங்கு எத்தனையோ சந்நியாசர்கள், கன்னியாஸ்திரீமாரின் பிரேதங்கள் சவக்குழிகளிலிருந்து தானும் தோண்டியெடுத்து அநாசாரம் செய்யப்படலாயின. அதனால் அந்நகருக்குவெளியே ரிபிடாபோமலையின் உச்சியிலுள்ள திருஇருதய ஆண்டவரின் நிந்தைப்பரிகார ஆலயத்தில் ஓர் இராமுழுவதும் நடந்தேறும் நிந்தைப்பரிகார ஆராதனையுடன் வைகாசிமாதம் 27-ந்திகதியன்று சற்பிரசாத மகாநாடு ஆரம்பமாகும். அதன் பிரதம வைபவங்களை நடத்துதற்கென்று 12-ம்பத்திநாதபாப்பரசர் சதுக்கமென நிரந்தரமாக அறியப்படவிருக்கின்ற நவமானபெரிய சதுக்கம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மகாநாடுகள் எதிலும் முன்னர் நிகழ்ந்திராத பெரிய சம்பவம் ஒன்று யாதெனில், பார்சலோனா துறைமுகத்துக்கு மேலாகக் காட்சியளிக்கும் ஓர் குன்றின்மீதுள்ள மொண்றாயிச் ஸ்ரேடியம்என்ற அரங்கத்திலே ஏககாலத்தில் அநேகமேற்றிராணிமார் தொகையான குருத்துவ மாணவர்களைக் குருப்பட்டாபிஷேகம் செய்துவைப்பதாகும்.

### சவேரியாரின் கல்லறைக்கோயில்

சான்சியன்தீவிலே அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின் திருமேனியானது முதன்முதலாக அடக்கஞ் செய்யப்பெற்றிருந்த இடத்திலே எழுப்பப்பட்டிருந்த சிற்றாலயமானது சீனக்கம்யூனிஸ்த அரசாங்கத்தால் மூடிவிடப்பட்டிருக்கிறது. இந்தச் சிற்றாலயத்தைக் கவனித்துவந்த அமெரிக்ககுருமாரையும் கம்யூனிஸ்தஅரசாங்கம் வெளியேற்றிவிட்டு, அதிலேஇனிமேல் எவ்விதசடங்கும் நடைபெறலாகாதெனத் தடைஉத்தரவு பிறப்பித்தது. அர்ச். சவேரியார் சீனதேசஞ்சென்று வேதம்போதிக்கவிரும்பினார். ஆனால், சீனாவுக்குள் நுழைய அக்கால சீன அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை. எப்படியாவது அனுமதிபெறுவதென்ற திடசங்கல்பத்துடன் அவர் சான்சியன் என்றதீவில் தங்கியிருக்கும்போது, சுரங்கண்டு 1552-ம் ஆண்டு மார்கழிமாதம் 3-ந்திகதி பரமபதமடைந்தார். அவர்திருமேனி முதன்முதலாக அடக்கஞ்செய்யப்பெற்ற கோவில்தான் [illegible]

## தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரின்

# தபசுகால நிருபம்

யேசுவின் திருஇருதயத்தினிடம் நமக்கு மிகவும்பிரியமுள்ள சகோதரர்களே! பிள்ளைகளே!! ஒருநாள் ஒருமனிதன் தன் வீட்டைவிட்டுப் புதர் அடர்ந்த காட்டுவழியாய் நடந்து செல்லும்போது திடுகூறாய் ஓர் மதயானை வெருண்டு பிளிறிக்கொண்டு வேகமாய்வருகிறதைக் கண்டு நடுநடுங்கி நெஞ்சம் பதைத்துப் பக்கத்தில்இருந்த ஓர் மரத்தின் மேல் ஏறிக்கொண்டான். அவன் துர் அதிர்ஷ்டம், அவன் ஏறிப்பிடித்த கிளையைப் புழுஅரித்திருந்தது. அதைக்கண்டு மறுகிளையில் ஏறினான். அந்தோ! அங்கே ஒருநல்லபாம்பு படம் விரித்து ஆடுகிறதைக் கண்டு கிலிபிடித்து மறுகிளையில் தாவினான். அங்கே பார்த்தாலோ ஓர் தேன்கூடு. கூட்டிலுள்ள தேன் ஈக்கள் அவனைக்கொட்டத்தொடங்கின. இத்தர்மசங்கடவேளையில் கீழேவிழுந்து தப்பிஓடலாமென்றால், மதயானை மரத்தை அசைத்து அசைத்து விழத்தாட்டப்பார்க்கிறது. இந்தநிர்ப்பந்த நேரத்திலே, தேன்கூட்டிலிருந்து ஒருதுளிதேன் அவன் நாவிலே விழுந்தது. ஒருசொட்டுத்தேன் ருசியைக்கண்டு மற்றெல்லாவற்றையும் மறந்து, கீழேவிழுந்து அவலமாய்ச்செத்தான் இந்த மூடன். இந்தமூடனைப்பார்க்கிலும் சர்வமூடர்கள் இருக்கிறார்கள்அனந்தம்பேர். வீரமாமுனிவர் செப்பிய இந்த அருமையான உவமையின் அர்த்தம் என்ன?

மதயானையானது உன்னை விவேகமாகத் தொடர்ந்துவரும் சாவு. நீ ஏறினமரம் உன்னுடைய ஆயுள். மூன்றுகிளையாவன: வாதம், பித்தம், சிலேட்டுமம். யானை மரத்தைஅசைக்க அசைக்க மரம்தளர்ந்து விழுகிறதுபோல், உன்னுடைய பெலனும் நாளுக்குநாள் குன்றிப்போக மரணம் அடுத்து வரும். நாகபாம்புக்குப் பயப்படுகிறதைவிடப் பாவத்துக்கு அதிகமாகப் பயப்படு. பாம்பு தீண்டினால் உயிருக்குமோசம். கனமான பாவத்தைச்செய்தால் அழியாத ஆத்துமத்துக்குக் கேடு.

அன்பார்ந்த பிள்ளைகளே! இவ்வருடத் தபசுகால நிருபத்தின் நோக்கம், உலகவாழ்வு அநித்தியம்என்று உணர்ந்து நன்மரணத்துக்கு ஆயத்தஞ் செய்து நித்தியவாழ்வைத் தேடவேண்டுமென்பது. மேலே சொன்ன உவமை இதற்கேற்ற பீடிகை. மனிதன் இவ்வுலகில் அடையஆசிக்கிற திரவியசம்பத்து, சரீரசுகபோகம, மகிமை பெருமையெல்லாம் ஒருசொட்டுத் தேனுக்குச் சமானம். இந்த ஒருதுளிதேனுக்காக மதிமயங்கி முடிவில்லாப் பேரின்ப மோக்ஷ பாக்கியத்தை இழந்துபோகலாமா? இந்தஅஸ்திவாரசத்தியத்தை நாம்கண்டுணர்ந்து மோக்ஷபாக்கியத்தை நாடும்படி தாயாகிய திருச்சபை ஏற்படுத்தியிருக்கிறது தபசுகாலம். தபசுகாலம் கத்தோலிக்கர் அனைவருக்கும் பொதுத்தியான காலம். தபசுகாலம் நாற்பது நாள். அனுக்கிரகத்தின்காலம். இரட்சணியத்தின் நாட்கள் தபசுகாலம். தபசுசெய்யவேண்டியகாலம் தபசுகாலம்.

தவறிப்போன ஆடுகள் திரும்பவும் மந்தையில் வந்து சேர வேண்டியகாலம் தபசுகாலம். திருச்சபைச்சட்டங்களை உதறித்தள்ளி மனம்போன போக்கில் சென்றவர்கள், மனஸ்தாபப்பட்டு நல்லபாவசங்கீர்த்தனம் செய்து புதுச்சீவியம் சீவிக்க வேண்டியகாலம் தபசுகாலம். புறத்தியாருடைய பேரைக் கெடுத்தவர்கள், புறத்தியார் சொத்தை அபகரித்தவர்கள், கோவில்சொத்தைத் திருடினவர்கள் பரிகாரம் செய்யவேண்டியகாலம் தபசுகாலம். திருச்சபைக்கட்டளையைமீறிக் கள்ளத்தாலி கட்டினவர்கள், றெஜிஸ்றர் கல்யாணம்முடித்தவர்கள் நரகநெருப்பில் விழாதபடி தாழ்ச்சியுடன் மன்னிப்புக் கேட்டு, மெய்விவாகம்என்கிற தேவதிரவிய அனுமானத்தைப் பெறவேண்டியகாலம் தபசுகாலம். சாதாரணநாட்களைவிட அதிக செபதபம், தானதர்மம் செய்யவேண்டியகாலம் தபசுகாலம். நமது இரட்சகரின் திருப்பாடுகளையும், அவருடைய திருத்தாயாரின் வியாகுலங்களையும்பற்றித் தியானிக்கவேண்டியகாலம் தபசுகாலம். எப்படிக் கர்த்தர்பிறந்த திருநாளுக்குமுன் ஆயத்தம்செய்கிற காலம் ஆகமனகாலமோ அதுபோலக் கர்த்தர்உயிர்த்த திருநாளாகிய பாஸ்குத்திருநாளுக்கு ஆயத்தம்செய்யுங்காலம் தபசுகாலம்.

நல்லபுத்தகங்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் இவைகளை நாம் வாசிக்கிறது மாத்திரமல்ல, புறமதஸ்தர்களை வாசிக்கச்செய்யும்படி முயற்சிக்கும் அச்சுப்பிரசுரகாலம் தபசுகாலம். பங்குச்சனங்கள் வண. பங்குக் குருவானவரோடு ஒத்துழைத்து ஆத்துமஇரட்சணிய அலுவலில் ஈடுபட்டு உற்சாகத்துடன் கத்தோலிக்கசேவை புரியும்காலம் தபசுகாலம். தொடக்கின கோவிலோ, மடமோ, பள்ளிக்கூடமோ முடியாமலிருக்கிறதைக் கண்டு, எல்லோரும் சேர்ந்துமுடிக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்யவேண்டிய காலம் தபசுகாலம். நமது வரவு என்ன? நமது செலவுஎன்ன? நமது இருப்புஎன்ன? நமது கடன் என்ன? இன்றுநாம் கண்ணைமூடினால், நமதுகதி என்னவாகும்? நமதுகுடும்பத்தின்கதி என்னவாகும்? என்று பரிசோதித்து நேரகாலத்தோடே நமதுமரணசாசனத்தை எழுதுங்காலம் தபசுகாலம். முதலாளிமாருக்கும் தொழிலாளருக்கும் ஏற்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

**1. பாடசாலைத் தவணை மாற்றம்**

நமதுபாடசாலைகளின் முதலாந் தவணை 31-3-52-இல் முடிவாகி இரண்டாந்தவணை 28-4-52-இல் ஆரம்பமாகும் என்று தலைமைஆசிரியர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

**2. ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்**

ஆசிரியர்களின் வருடாந்த ஞானவொடுக்கம் கொழும்புத்துறைத் தாபனத்தில் வருகிற சித்திரைமாதம் 1-ந் திகதி செவ்வாய்க்கிழமை பின்னேரம் தொடங்கிச் சித்திரைமாதம் 5-ந் திகதி சனிக்கிழமைகாலை முடிவாகும்.

மருதமடுத் திருப்பதியில் நடந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்றுத ஆசிரியர்கள்அனைவரும் இதில் பங்குபற்றுவார்கள்என எதிர்பார்க்கிறோம்.

இந்தஞானவொடுக்கத்தில் பங்குபற்றவிரும்பும்ஆசிரியர் கூடியவிரைவில் எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கும் இந்த ஞானவொடுக்கத்தில் பங்கு உண்டு என்று நினைவூட்டுகிறோம்.

**T. A. J. Mathuranayagam,**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 10-3-52

### திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 14 | அ. மத்தில்தம்மாள் | (ஊ) |
| சனி | 15 | அ. லொஞ்சினுர் | (ஊ) |
| ஞா | 16 | தபசுகால 3-ம் ஞாயிறு — அ. அபிராம் | (ஊ) |
| திங் | 17 | அ. பத்திரிசியார் | (வெ) |
| செ | 18 | அ. எருச. சிறிலப்பர் | (வெ) |
| புத | 19 | கன்னிமரியாயின் பத்தாவான அ. சூசையப்பர், சாதாரண திருச்சபை. பாதுகாவலர் | (வெ) |
| வி | 20 | அ. சுவக்கீன் | (ஊ) |

சத்தியவேத
பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
பங்குனிமாதம் 13-ந் திகதி

## வேதசாட்சிகளின் குருதி

"வேதசாட்சிகளின் குருதி வேதத்தைப்பிறப்பிக்கும் வித்து" என்பது புராதனகால முதல் கத்தோலிக்க திருச்சபையில் வழங்கும் அருமையான ஓர் சுலோகம். எமது இரட்சாமூர்த்தியாகிய கிறீஸ்துநாதராலே கத்தோலிக்கதிருச்சபை ஸ்தாபிக்கப்பெற்ற காலமுதலாகச் சென்ற இருபதுநூற்றூண்டுகளிலும் எங்கெங்கு குரூரவேதகலாபனைகள் நிகழ்ந்து, எங்கெங்கு வேதசாட்சிகளின் குருதி ஆறாய்ப்பெருகியதோ, அங்கங்கெல்லாம் அவர்கள் சிந்திய குருதியானது நம் சத்தியமறையைப் பிறப்பித்துத் தழைத்தோங்கச் செய்திருக்கிறதென்பது சரித்திரப்பிரசித்திபெற்ற ஓர்சம்பவமாகும். முந்திய பத்தொன்பது நூற்றூண்டுகளிலும் நிகழ்ந்தவைபோக, நம்முடைய காலத்திலே, இந்த இருபதாம் நூற்றூண்டிலே மெக்சிககோவிலும், ஸ்பெயினிலும் கம்யூனிஸ்த வேதாளங்களின் சதிமானபுரட்சிகளாலே எத்தனையோமேற்றிராணிமார், குருமார், கன்னிகாஸ்திரிமாரும், கத்தோலிக்க மக்களும் வேதத்துக்காகத் தங்கள் உயிரைத் தியாகஞ்செய்து வேதசாட்சிகளானார்கள். ஆனால் அவர்கள் சிந்தியகுருதி அவம்போகவில்லை. அத்தாலேஇன்று அவ்விருநாடுகளும் புடத்தில் வைத்துப் பழுக்கக்காய்ச்சிய பொன்னேபோல் வேதவிசுவாசத்தில் சுடர்விட்டுப்பிரகாசிக்கின்றன.

உதாரணமாக, கம்யூனிஸ்த அரசியற்புரட்சி — அதாவது உள்நாட்டுயுத்தம் நடைபெற்ற காலத்திலே ஆயிரக்கணக்கான ஸ்பானியர்கள் வேதத்துக்காகச் சிந்தியகுருதியினுல் நீர்ப்பாய்ச்சப்பெற்றுப் புனிதமுற்ற ஸ்பானியமண்ணிலே இன்று பலம் பொருந்திய புதியதோர் திருச்சபை தோன்றியிருக்கிறது. அங்கே திருச்சபை அடைந்துள்ள நவமானசிவத்துவத்தின் அறிகுறிகளில்ஒன்று, குருத்துவபதவிக்கும், சந்நியாச, கன்னிகா வாழ்க்கைக்குமுரிய அழைத்தல்கள் மகத்தானவிதமாகப் பெருக்கமடைந்திருப்பதேயாகும். அதனுல் அங்குள்ள குருமடங்களும், நவசந்நியாச, கன்னிகாமடங்களும் அத்தகைய அழைத்தல்கள் பெற்றவர்களால் தேங்கிப்போயிருக்கின்றன. கல்வியும் தீவிர வளர்ச்சி எய்துகின்றது. மாணவர்களாலே சர்வகலாசாலைகள் நிறைந்திருக்கின்றன. உதாரணமாக, ஐரோப்பாவின் மகாப்பெரிய சர்வகலாசாலையான மதிரித்நகர சர்வகலாசாலையிலே 34,000 மாணவர்கள் பயின்றுவருகின்றூர்கள். எந்த ஒருநாட்டுக்கும் கட்டுப்படாத ஓர்சுதந்திரநாடாக ஸ்பெயின் இன்று திகழ்கின்றது. இவ்வாறு மறுமலர்ச்சி அடைந்திருக்கின்ற ஸ்பெயினிலே—அதன்பிரதான நகரங்களில் ஒன்றாகிய பார்சலோனுவிலே 35-வது சர்வதேச சற்பிரசாதமகாநாடு நடந்தேறவிருப்பது சாலவும் பொருத்தமானதே.

நிற்க, மேற்குஐரோப்பாவின் பாதுகாப்புவிஷயமாய் ஸ்பானியதேசம் கேந்திரமான ஓர் ஸ்தானத்தில் இருக்கின்றது. அதனுல் பாதுகாப்புவிஷயமாய், இன்றையஉலகில் கம்யூனிஸத்தைச் சென்மசத்துருவாக நினைந்து எதிர்த்துநிற்கும முன்னணிநாடுகளில் ஒன்றான ஸ்பெயினும் சிறப்பாகக் கலந்துகொள்ள அனுமதியளிக்கப்படவேண்டியது நியாயமே. ஆனல், பிருங்கோவிலும், அவரது ஆட்சியிலும் அழுக்காறுகொண்டவர்களாய்ப் பிரித்தானியிலும், பிரான்சிலும், பிறஐரோப்பிய நாடுகளிலுமுள்ள ஒருதொகையான அரசியற்தந்திரிகள் எதிரிடையாகநின்று, ஸ்பெயினின் வடஎல்லையிலுள்ள பிறென்னிஸ் மலையுடன் ஐரோப்பா முடிவடைந்துவிடுவதாக மந்திரஞ்சொல்லியும், பிருங்கோவின் ஆட்சி சர்வாதிகார ஆட்சியென்று புறஞ்சொல்லியும்வந்து அமெரிக்க உதவி அதற்குக் கிடையாது தடுத்துவந்தார்கள். கம்யூனிஸ்த சர்வாதிகார ஆட்சி நடத்தும் மாஷல்திற்றூவைத் தலைவராகக்கொண்ட யூகோசிலேவியாவுக்கு [illegible] உதவிகிடைக்கும்போது, ஸ்பெயினுக்கு அந்தஉதவிமறுக்கப்படுவது அநீதியென்பதையும், மேற்குஐரோப்பாவின் பாதுகாப்புக்கு அதன்உதவியும் ஆவசியகமென்பதையும் அமெரிக்கவரசு கடைசியாக உணர்ந்து இப்போது அதற்குப் பொருளாதாரவிஷயமாகவும், இராணுவவிஷயமாகவும் விசேஷவகுப்பிற்குரிய முதற்தர உதவி செய்யத் தீர்மானித்துள்ளது. இந்தஉதவி கிடைக்குமிடத்து, லோகப்பொருள்வளம்பொருந்திய ஸ்பெயின் தீவிரவிருத்தியடைந்து கம்யூனிஸத்தின் ஆக்கிரமிப்பைத் தடுக்குவல்ல பாரியதோர் அரணுக விளங்குமென நம்பியிருக்கலாம்.

பயங்கர கேட்டின் பாதையிலே

## பறந்துசெல்லும் உலகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பழையஏற்பாட்டைப் புரட்டிப்பாரும். சருவேசுரனுல் குறிக்கப்பட்ட பேழையைக்கட்ட நோவாஎன்பவர் அநேகாநேக ஆண்டுகள் உழைக்க வேண்டியிருந்தது. அந்தஆண்டுகள் தோறும் அவர் தமமைச்சூழவிருந்த மானிடர்க்குக் கண்டிப்பானஎச்சரிப்புக் கூறிவந்தாரே. அவர்கள் செவிசாய்த்தார்களா? இல்லை. வந்தது சலப்பிரளயம். மடிந்ததுமனுக்குலம். சோதோம், கொமோரு எனும் பட்டினவாசிகளின்மேல் விழுந்ததீர்ப்பு என்னவென்று சொல்லவும் வேண்டுமா? நண்பரே! இவ்வளவில் தேவகோபாக்கினிக்குத் தப்ப ஒரே ஒருவழி மாத்திரமுண்டு. வேறுயாதும் கதி இல்லை. அதாவது, செபத்துடனும், தபத்துடனும், உண்மையான மனஸ்தாபத்துடனும், மனிதகுலம் முற்றும்மனம்மாறி நினிவே பட்டினவாசிகளைப் போலத் தேவபிதாவின் பாதமலரடிகளில் விழுந்து, அவருடைய இரக்கத்தை வேண்டிநிற்பதேயாம். வேறுஎதையும் மனுக்குலம் அவருக்குச் சொல்லித் தப்ப வழியேஇல்லை.

சென்ற பதின்மூன்றுஆண்டுகளாகச் சத்தியதிருச்சபையின் பிரத்தியட்சதலைவராக, அன்பானபிதாவாக, அரசர்எவரிலும் மேம்பட்டஅரசராக எம்மை ஆண்டுநடத்தும் பன்னிரண்டாவது பத்திநாத பாப்புமகிபர், பயங்கரமான கேட்டின் பாதையிலே பறந்துசெல்லும் மனுக்குலத்தை இடைவிடாது அன்புடனும், அதிகாரத்துடனும், வெகுகண்டிப்பாகவும் எச்சரித்துக்கொண்டு வந்திருக்கின்றூர். "உங்கள் அன்பான பிதாவின் புத்திமதியைக் கேட்டு ஒழுகுங்கள்" அன்றேல் ஐயோ கேடாம்! என்று கனிந்துஇரங்கி அழுது வேண்டுகின்றூர். சென்றமாதம் றோமர்களுக்கு ஒலிபரப்பிமூலம் அவர் துக்கம்நிறைந்த இருதயத்துடன் பிரலாபித்துச் சொன்னதை நாம் வாசிக்கும்பொழுது, எமதுமனம் அச்சமேகொள்ளுகின்றது. நமது திவ்வியஇரட்சகர் ஜெருசலேமைப் பார்த்து அழுதாரே. அந்தச்சம்பவமும் அன்று அவர் சொன்ன வாக்கியங்களும்படக்கெனக்கண்முன் எழுகின்றன. "ஐயோ! உனக்குக் கிடைத்த இந்தநாளாகிலும்உன் சமாதானத்துக் கேற்றவைகளை நீ அறிந்திருக்க வேண்டும்........ நீ உனது இரட்சணியத்தின் காலத்தை அறியாததனுல்........ நீ தரைமட்டமாக்கப்படும் நாள் வரும்........" (லூக்கா 19: 42-44)

(பரிசுத்தபிதா அன்று உரைத்த காத்திரமான புத்திமதிகளையும். அவரது பிரலாபம் நிறைந்த எச்சரிப்பையும், அழைத்தலையும் அடுத்த காவலில் தருவோம்.)

### பிரான்சீஸின் சரீரம்

பாத்திமாவிலே பரிசுத்ததேவதாயார் காட்சியளித்த மூன்று பிள்ளைகளில் பிரான்சீஸ்எனும் பாலியனும்ஒருவன். மரித்த பின்னர் அடக்கஞ்செய்யப்பெற்றுக் காணமற்போயிருந்த இப்பாலியனின்சரீரம் இப்போது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. மாதாவின் காட்சிபெற்றபோது ஒன்பது வயசுடையவனுயிருந்த பிரான்சீஸ், அப்போது ஏழு வயசுடையவளாயிருந்த ஜசிந்தாவின் சகோதரனும், தற்போது ஓர்கார்மேல்சபைக் கன்னியாஸ்திரியும், அம்மூவருள்ளும்இன்னமுமே சீவனேடிருப்பவளுமான லூசியாவின் மைத்துனனுமாவன். இப்போது 80 வயதுக்கு மேற்பட்டவரும், பிரான்சீஸின் தந்தையுமான மனுவேலாலும், இவர் சகோதரனுன் யோவாவோலாலும் கிராமச்சேமக்காலையிலே சரீரம்கண்டுபிடிக்கப்படலாயிற்று. இதுபிரான்சீஸின் சரீரந்தான்என்பது லீருவின் மேற்றிராணியாராலும், பிரான்சீஸ், ஜசிந்தா இருவருக்கும் முத்திப்பேறுபட்டம் சூட்டுவிப்பதற்கானவிசாரணையை நடத்திவருகிறவரான கனன் வெனுன்சியோ சுவாமிகளாலும், பாத்திமா குருமடத்தின் தலைவரான கனன் ஒலிவியேரு சுவாமிகளாலும், திருசேத்திரத்தின் பிரதமவைத்திய அதிகாரியாலும், மற்றும்திருச்சபை அதிகாரிகள், வைத்தியஅதிகாரிகள், அரசாங்கஅதிகாரிகளாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதனுல் அது ஜசிந்தாவின்பக்கமாக அடக்கஞ்செய்யப்படுமாறு பாத்திமாமகாலயத்துக்கு எடுத்துச்செல்லப்படவிருக்கிறது.

— ஜனதிபதிட்றூமன் அவர்கள் சென்றவெள்ளியன்று பிறநாடுகளுக்கான 790கோடிடலர் புதியஉதவித்திட்டவிஷயமாகப் பேசியபோது, 'பஞ்சத்தைநிறுத்துங்கள், கமயூனிஸ்தர்கள் நிறுத்தப்படுவார்கள்; பீரங்கிகளையும், விமானங்களையும் அனுப்பிவைப்பது அல்ல, ஆனல், ஆசியாவிலுள்ள பிற்போக்கான பகுதிகளிலே பொருளாதார—தொழில்நுட்ப உதவி செய்வதுதான் கம்யூனிஸத்தைத்தடுத்துப் பாதுகாக்கும் முதல்வரிசைஅரண்' எனக்கூறியிருக்கின்றூர்.

— 1கோடியே 50லட்சம் மாணவர்களுக்கு மேற்படக்கொண்டனவாய் உலகமுழுவதிலும் தற்போது 90,000 கத்தோலிக்க கல்லூரிகளுக்கு மேல் இருந்துவருவதாக றோமாபுரியிலுள்ள குருமடங்கள், சர்வகலாசாலைக் கலைகளின் திருச்சங்கசெய்தி அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய நற்கருணையின்பேரில்

## (திரிகோணமலை மேற்றிராணியாரின் தபசுகால நிருபம்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

### தேவநற்கருணையில் யேசுநாதர் நமதுஉணவு

தேவநற்கருணையில் யேசுநாதர் நமது நல்லமேய்ப்பனாய் இருக்கின்றனர். தன் ஆடுகள் மேயும்படி, பசுமையானபுற்றரைகளுக்குத் தன்மந்தையை வழிநடத்துதல் மேய்ப்பனின் பிரதான கடமையாகும். தனது மந்தைக்கு வசதியான மேயும்இடத்தைத் தேடுவதற்காக அவன் எவ்விதபிரயாசத்தையும், தொல்லையையும், வருத்தத்தையும் கவனிக்கமாட்டான். ஆனால், தேவநற்கருணையில் எங்கள் நல்லமேய்ப்பர் தமது ஆடுகள் தமது திவ்விய சரீரத்தைப் புசித்துத் தமது விலைமதியாத இரத்தத்தைப் பானம்பண்ணும் பொழுதுதான் திருப்தியடைகின்றனர். "எடுத்துப்புசியுங்கள்; இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் எனதுசரீரம்", "நீங்கள் எல்லோரும் இதிலே பானஞ் செய்யுங்கள்; ஏனெனில், இது பாவங்களின் பொறுத்தலின்நிமித்தம் அநேகருக்காகச் சிந்தப்படும் புதிய உடன்படிக்கையின் என் இரத்தமாயிருக்கிறது" (Matt—XXV—27-28).

நமது நல்லமேய்ப்பரிடம் இருந்துவரும் எவ்வளவு அன்பான கட்டளை! அவருடையமந்தையின் உணவு பொதுவான உணவல்ல.. அது மாமிசமாகிய வார்த்தையானவரின் சரீரமும் இரத்தமுமாகும். இந்தஉணவை நல்லமேய்ப்பர் நமக்குத் தருகின்றனர். ஏனெனில், அவரே அவ்வுணவாய் இருப்பதாலும், அதைப்பெறும் எல்லோரையும் அது ஐக்கியமாய் அவரோடு இணைப்பதாலும் அவர்கள் அவரோடு ஒன்றாகின்றனர். "என்மாமிசத்தைப் புசித்து என்இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான். நானும் அவனில் வசிக்கிறேன்" (John IV—57.)

கிறீஸ்துநாதரோடு ஒன்றித்தல் என்றால், அவருடைய சீவியத்தில் பங்குபற்றல். அந்தச்சீவியம் வரப்பிரசாதத்தின்சீவியம்; நமது சுபாவத்துக்கு மேலானசீவியம். ஏனெனில், அந்தச் சீவியம்மாத்திரமே நம்மைச் சருவேசுரனின் பிள்ளைகளும், மோட்சத்தின் உரித்தாளரும் ஆக்குகின்றது. இந்தச் சீவியம் இல்லாமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது. திவ்வியதேவநற்கருணை இல்லாமல் அந்தச்சீவியத்தை நாம் பெறமுடியாது. நமது ஆண்டவரும் நமக்குஅவ்விதமே கூறுகின்றனர். "மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் மனுமகனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களிடத்தில் சீவியம்இராது. என் மாமசத்தைப் புசித்து, என்இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியசீவியம் உண்டு. கடைசிநாளில் நான் அவனை உயிர்ப்பிப்பேன்" (John VI 54—55).

ஞானஸ்நானம் எனும் தேவதிரவிய அனுமானத்தைப்பெறும் எல்லோரும், அச்செயலினால் தேவநற்கருணையைப் பெறும் விருப்பத்தையும் வெளிப்படுத்துகின்றனர். இந்தத்தேவதிரவிய அனுமானம், திவ்வியதேவநற்கருணை நமக்குக் கிறீஸ்துநாதரோடு உண்டாக்கும் நெருங்கியஐக்கியத்தின் முதலாம் ஆயத்தம் அல்லது முதலாம்படியாகும். ஆதலால், கிறீஸ்துநாதரின் சரீரத்தைப் பெறாமல் நித்தியசீவியத்தைத் தங்களுக்கு இழந்துபோகிறவர்கள் யார்? திருச்சபையானது கிறீஸ்துநாதரின் அதிகாரத்தோடும், அவர் பேராலும் வசனித்து இந்தக்கேள்விக்குத் தெளிவானவிடை கொடுத்திருக்கின்றது.

திருச்சபையின் நான்காம் கட்டளையில் புத்திவிபரமறிந்த விசுவாசிகள் பாஸ்குக்காலத்திலே வருடத்தில் ஒருமுறையாகுதல் தேவநற்கருணை பெறவேண்டும் என்று விதிக்கின்றது. இதுவே நாம் செய்யக்கூடிய ஆகச்சிறிய பகுதி. இவ்விதம் செய்யாவிட்டால் ஓர்சாவானபாவத்தைக் கட்டி நித்திய இரட்சணியத்தையும் இழப்போம். இதுசம்பந்தமாகப் பெற்றோருக்கு ஓர் எச்சரிக்கை காலத்துக்கு ஏற்றதாய் இருக்கும்.

தங்கள் பிள்ளைகள் முதல்தேவநற்கருணை பெறும்நாளை நியாயமின்றிப் பின்போடும் பெற்றோர் பிள்ளைகள்மட்டில் செலுத்தவேண்டிய கடமையில் பாவத்துக்குரியவிதமாய்த் தவறுகின்றனர். பிள்ளைகளுக்குத் தகுந்தஉடுப்பில்லை என்பதே பெற்றோர் தங்கள் கவலையீனத்தை மறைக்கும்படிசொல்லும் சாட்டு. நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் ஓர் இராசமாளிகையில் பிறந்திருக்கலாம். அதற்குப் பதிலாய் நம்மில் தாம்வைத்திருக்கும் அன்பைத்தெரிவிக்கும்படி ஓர்மாட்டுக் கொட்டிலைத்தெரிந்தனர். அவருடைய சிறுசரீரமானது வைக்கோலினால் மூடப்பட்டிருந்தது. ஆனால், நீங்களோ உங்கள் மக்களுக்கு அழகியஉடுப்பு இல்லாததால் அவர்களை ஆண்டவரிடம்போக விடுகிறீர்களில்லை. இவ்விதஞ்செய்தல் அவருக்குப் பொருந்துமோ? தகுந்தஉடுப்பில்லாமல் பிள்ளைகளை முதல்தேவநற்கருணை பெறவிட்டால் இனத்தவர்களும், சிநேகிதர்களும் நகைப்பார்களே என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், உங்களுக்காக வறுமையாய்ப் பிறத்தலும், எளிய உடைதரித்தலும் அவமானம் என்று ஆண்டவர் நினைக்கவில்லை. உங்களுடையமக்களின் விலையுயர்ந்த உடுப்புகளை அல்ல, அவர்களின் பரிசுத்தமும் அன்பும்நிறைந்த இளமையான இருதயங்களையே அவர் விரும்புகின்றனர்.

யேசுக்கிறீஸ்துநாதரில் அருமையான பிள்ளைகளே! வருடத்துக்கு ஒருமுறை தேவநற்கருணைபெறும் கனமானகடமை நமக்குண்டு. ஆனால், உண்மையில் இதுபோதாது. நித்திய இரட்சணியத்தை அடையும்நிச்சயம் நமக்கு வேண்டுமாயின், இந்தத்தேவதிரவிய அனுமானத்தை நாம் அடிக்கடி பெறவேண்டும். உணவு சரீரத்துக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவாய்த் தேவநற்கருணை ஆத்துமத்துக்கு அவசியம். சரீரத்துக்கு உணவில்லையாயின் சீக்கிரத்தில் அது பெலன் குறைந்துசாகும். போதியஉணவு சரீரத்துக்குக் கொடாவிட்டால் அது பெலன்குறைந்து எவ்விதவியாதிக்கும் உள்ளாகும். உணவே அதற்கு உற்சாகத்தையும், பெலனையும்கொடுக்கும். இவ்வண்ணமே ஆத்துமத்துக்குத் தேவநற்கருணையைக் கொடாவிட்டால் அது பெலன்குறைந்து வரப்பிரசாதத்தையும் இழக்கும். அருமையாய் அதைப்பெறுவோமாகில் நமது ஆத்துமம் பெலன்குறைந்து, சோதனையில் தோற்றுக் குற்றத்திலும்விழும். திவ்வியதேவநற்கருணையே அதற்குச் சீவியத்தையும், பெலனையும் கொடுப்பது. இது ஓர் அதிசயமல்ல. சீவியத்திற்கும், வரப்பிரசாதத்திற்கும் ஊற்றாகிய தமது திருச்சரீரமும், விலைமதியாத திருஇரத்தமும் நமது நல்லமேய்ப்பர் நமக்குத் தரும்உணவு. அடிக்கடி அதைப் பெற்று வரப்பிரசாதத்தில் பெலன் அடையுங்கள்.

என்றாலும் சம்மனசுக்களின் அப்பத்தைக் கவலையீனமாக நாம் பெறக்கூடாது என்பதை நினைவுகூரவேண்டும். நமது சருவேசுரனும், இரட்சகரும், சருவேசுரனின் மாசில்லாத செம்மறிப் புருவையுமாகிய யேசுநாதரின் சரீரத்தைப் பெறுகின்றோம். இவர் சந்நிதானத்தில் பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ளவர்கள் அடிபணிவார்கள். ஓர் சாவானபாவம் ஆத்துமத்தில் இருக்குமட்டும் தேவநற்கருணை பெறக்கூடாது. ஏனெனில், இது ஓர் பயங்கரமான பரிசுத்தகேடாகும். சருவேசுரன்தாமே நமக்கு அர்ச். சின்னப்பரின் திருவாய்மொழியால் சொல்வதைக்கேளுங்கள். "யாதொருவன் அபாத்திரமாய் இந்தஅப்பத்தைப் புசிப்பானாகில் அல்லது அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவானாகில், ஆண்டவருடைய சரீரத்தின்மட்டிலும் இரத்தத்தின் மட்டிலும் குற்றவாளி ஆவான். ஆதலால், எந்த மனிதனும் தன்னைத்தானே பரிசோதித்த பின்பு, இந்தஅப்பத்தில் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம்பண்ணுவானாக. ஆண்டவருடைய சரீரமென்று நிதானித்துணராமல், எவன் அபாத்திரமாய்ப் புசித்துப் பானம்பண்ணுகிறானோ, அவன் தன் ஆக்கினைத் தீர்ப்பைப் புசித்துப் பானம்பண்ணுகிறான்" (1 கொரிந்தியர் XI 27—29.)

(தொடரும்)

## தபசுகாலத்தின் 3-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 14: 4—28)

அக்காலத்தில் யேசுநாதர் ஓர் பசாசைத்துரத்தினார். அது ஊமையாயிருந்தது. அவர் பசாசைத்துரத்தினபின்பு ஊமையன்பேசவே சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களிற் சிலர்: இவன் பசாசுகளின் தலைவனாகிய பெயேல்செபூபினாற் பசாசுகளைத்துரத்துகிறான் என்றார்கள். வேறுசிலர் அவரைச் சோதிக்க வானத்திலிருந்து ஓர் அற்புதத்தை அவரிடத்திற் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால், அவர் அவர்களுடைய நினைவுகளைக் கண்டமாத்திரத்தில், அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: தனக்குத்தானே விரோதமாய்ப்பிரிந்த எந்தஇராச்சியமும் பாழாய்ப்போகும்; அப்படிப்பிரிந்த வீடும் வீட்டின்மேல்விழும். அப்படியிருக்கப் பசாசு தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்துபோனால் அதின்இராச்சியம் நிலைநிற்கிறதெப்படி? ஏனெனில், நான் பெயேல்செபூபினாற் பசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்கள். நானே பெயேல்செபூபினாற் பசாசுகளை ஓட்டுகிறேனாகில், உங்கள் மக்கள் யாரைக்கொண்டு ஓட்டுகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களுக்கு நடுவராயிருப்பார்கள். ஆனால், சர்வேசுரனுடைய விரலாற் பசாசுகளைத் துரத்துகிறேனாகில் நிச்சயமாய்ச் சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களிடத்தில் வந்திருக்கின்றது. ஆயுதமணிந்த பலசாலி தன்மாளிகையைக் காக்கிறபோது அவனுடைய உடைமைகள் எல்லாம் பத்திரமாயிருக்கின்றன. ஆனால், அவனிலும் அதிகபலசாலி ஒருவன் திடீரென்றுவந்து அவனைச் செயித்தாலோ, அவன்நம்பியிருந்த அவனுடைய ஆயுதங்கள் எல்லாவற்றையும்பறித்து, அவன் உடைமைகளையுங் கொள்ளையிட்டுப்பங்கிடுவான். என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடுசேராதவன் சிதறிப்போகிறான். அசுத்தஅரூபியாகிய பசாசு ஒரு மனிதனை விட்டுவெளிப்பட்டபின்பு, அது வரண்ட இடங்களில் இளைப்பாற்றியைத்தேடித் திரிந்தும், கிடைக்காமல், நான் விட்டுப்புறப்பட்ட என்வீட்டுக்குத்திரும்பிப்போவேனென்று சொல்லுகின்றது. மறுபடியும் வந்தபின்பு, அது துடைப்பத்தால் விளக்கப்பட்டுச் சோடிக்கப்பட்டிருக்கிறதைக்கண்டு, உடனேசென்று, தன்னிலும் அதிகம்பொல்லாத வேறு ஏழு அரூபிகளைத் தன்னோடு கூட்டிக்கொண்டுவர, அவைகள் உட்புகுந்து அங்கே வாசஞ்செய்கின்றன. அப்போது அம்மனிதனுடைய முந்தின ஸ்திதியிலும் பிந்தியஸ்திதி அதிககேடுள்ளதாகின்றது என்றார். அவர் இவைகளைச் சொல்லுகிறபோது சம்பவித்ததாவது: சனக்கூட்டத்திலிருந்து ஓர் ஸ்திரீ உரத்தசத்தமாகக்கூப்பிட்டு: உம்மைச்சுமந்தஉதரமும், நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம்பெற்றவைகளாமே என்று சொன்னாள். அதற்கு அவர்: சர்வேசுரனுடைய வாக்கியத்துக்குச் செவிதந்து, அதை அனுசரிக்கிறவர்களே அதைவிடப்பாக்கியவான்களென்று திருவுளம்பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரின் தபசுகால நிருபம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதகாராறுநீங்கிச் சாஸ்வத சமாதானம் நிலவவேண்டிய காலம் தபசுகாலம். தூங்கிக்கொண்டிருக்கிற மாதாசபை, செபஅப்போஸ்தலசபை, மரியாயின்சேனை இவைகளையெல்லாம் தட்டிஎழுப்ப வேண்டியகாலம் தபசுகாலம். மாணவ-மாணவிகள் கத்தோலிக்கபள்ளிக்கூடங்களுக்குப் போகாமல் வேறெந்தப் பள்ளிக்கூடங்களுக்கும் போனால், இது பெரிய குற்றம் என்று உணர்ந்து கத்தோலிக்க பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டியகாலம் தபசுகாலம். கூடுமான இடங்களில் உட்தியானம், வெளித்தியானம், பொதுத்தியானம் நடைபெறவேண்டியகாலம் தபசுகாலம். நம்முடைய வியாதிவருத்தம், துன்பதுரிதங்கள், நிந்தைஅவமானம் இவைகளையெல்லாம் நமது பாவங்களுக்குப் பரிகாரமாகப் பரிவுடன் ஏற்றுக்கொள்ளும்காலம் தபசுகாலம். மனிதன் உலகமெல்லாம் சொந்தமாக்கிக் கொண்டாலும் தனது ஆத்துமத்தை இழந்துபோனால் என்னபிரயோசனம் என்கிற பொன்மொழியை அநுதினம் அடிக்கடி சிந்திக்கவேண்டிய காலம் தபசுகாலம். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள், குருப்பிரசாதிகள், மேற்றிராணிமார் சாங்கோபாங்கத்தின் கொடுமுடியில் சேர முயற்சிக்கும்காலம் தபசுகாலம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

(1) திருச்சபையிலே தற்போதுள்ள கருதினுல்மாருள் வயதில் குறைந்தவர்யார்? வயதிற்கூடியவர் யார்?

வயதில்குறைந்தவர், ஓர் ஆங்கிலேயரும், வெஸ்ற்மினிஸ்றர் அதிமேற்றிராணியாருமான கருதினுல் கிறிவ்வின் ஆண்டவர். இவருக்குவயசு 52. வயதில்கூடியவர், ஓர் இத்தாலியரான கருதினுல் வெர்தேஆண்டவர். இவருக்கு வயது86.

(2) எம். போல் பிறெஸ்னே என்பவர்யார்?

இவர் கீர்த்திவாய்ந்த ஓர் பிரான்சியநடிகர். அர்ச். வின்சென்ற் டீ போலின் சீவியசரிதையை வர்ணிப்பதான "மிசியே வின்சென்ற்" எனும் சினிமாப்படத்தில் முதன்மையான பங்கு பற்றியவர். இவர் சமீபத்திலே மனந்திரும்பிக் கத்தோலிக்கராகியிருக்கின்ருர்.

(3) சிவப்புநாடாக் கொள்கை (RedTape) என்று இந்நாட்களிலே பத்திரிகைகளில் அடிபடுகின்றது அல்லவா? அது என்னத்தைக் கருதுகின்றது?

அரசாங்ககாரியாலய செயல்முறை ஒழுங்குகளால் ஒருகருமம் நடைமுறைக்குவர ஏற்படும் காலதாமதத்தையே அது கருதுகின்றது.

(4) கைத்துப்பாக்கிக்குப் "பிஸ்ரோல்" (Pistol) எனும்நாமம் எப்படிவந்தது?

இது ஜேர்மனியிலே "பிஸ்ரோலா" (Pistola) எனுமிடத்தில் முந்தமுந்தச் செய்யப்பட்டமையால் அதற்கு இந்த நாமம்வந்தது. இது 1500-ம் ஆண்டு முதல் ஜேர்மனியில் பயன்படுத்தப்படலாயிற்று.

(5) குளோறபோம் (Chloroform) என்பதுஎன்ன?

இது 1847-ம்ஆண்டிலே ஸ்கொத்திலாந்துதேச டக்றர்சிம்சன்என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மருந்து. இது சுண்ணும்புத்தூளில் மதுசாரத்தை (Alcohol) விட்டுச்செய்யப்படுவது. மயக்கமருந்தாகப் பிரயோகிக்கப்படுவது. சத்திரசிகிச்சைக்கு இது மிகவும் பயன்படுகிறது.

(6) எக்ஸ்-றே (Ex-ray) என்பது என்ன?

உடலை ஊடுருவி உள்ளேயிருப்பதைக் கண்டுகொள்வதற்கு உபயோகிக்கப்படும் ஓர்கருவி. உதாரணமாக, குழந்தைஒன்று ஓர் குண்டூசியை விழுங்கிவிட்டதென்ருல் உடனே எக்ஸ்-றேபடம் எடுத்துப்பார்க்கிருேம். அப்படத்திலே குண்டூசி இருக்கும் இடம் தெளிவாய்த்தெரியும். அதனுல் டக்றர் அதைஇலகுவாக எடுத்துவிடுவார். வயிறு, குடல் முதலியவற்றில் ஏற்படும்புண்களையும், சுவாசப்பைக் கோளாறுகளையும், எலும்புமுறிவுகளையும், உடலுள்இருக்கும் கட்டிகளையும் எக்ஸ்-றேமூலம் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

(7) பிரதமசிகிச்சை அல்லதுமுதல் உதவி (First Aid) என்பதுஎன்ன?

எதிர்பாராதவிபத்துகள், அல்லது அபாயங்கள் ஏற்படுமிடத்து டக்றர் வருகிறவரையிலே காயப்பட்ட அல்லதுமூர்ச்சித்த, அல்லதுநீரில்மூழ்கிய ஒருவருக்கு உடனேசெய்யும்உதவியேயாகும். இரத்தம்பெருகி ஓடுபவருக்கு அந்தஇரத்தப்பெருக்கைத் தடுக்கப் பிரதமசிகிச்சை செய்யலாம். நீரில் அமிழ்ந்தியவரைத் தலைகீழாகக்குலுக்கி நீரைவெளியேற்றலாம்.

(8) இலங்கையிலே முதல்சுப்பிறீங்கோடு எப்போது ஆரம்பமானது? முதலாவது பிரதமநீதியரசர் யார்? உதவிநீதியரசர் யார்?

இற்றைக்கு ஏறக்குறையச்சரியாய் 150 வருடங்களுக்குமுன் ஆரம்பமானது. அதன்முதலாவது பிரதம நீதியரசர், திரு. கொட்றிங்ரன் எட்மன்ட் கறிங்ரன் அவர்கள். இவருக்கு வருடச்சம்பளம் 5,000பவுண். முதலாவது உதவிநீதியரசர் திரு. எட்மன்ட் ஹென்றி லஷிங்ரன் அவர்கள். இவருக்கு வருடச்சம்பளம் 3,000 பவுண்.

# பொது வர்த்தமானம்

## அந்தரங்க தர்மசேவை

அமெரிக்கஐக்கியதேச போஸ்றன் நகரிலே திரு. ஜோர்ஜ் றெபேட் வைற் என்பவர் ஓர்சவர்க்காரத் தொழிற்சாலையின் சொந்தக்காரர். இற்றைக்கு முப்பதுவருடங்களின்முன் இவர் காலஞ்சென்றபோது தமதுதொழிற்சாலையில கிடைக்கும் ஒவ்வோர் மூன்றுடலர் ஆதாயத்திற்கும் இரண்டுடலர்வீதம் தருமகாரியங்களுக்குக் கொடுபடவேண்டுமென்று தம்முடைய மரணப்படுக்கையில் கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டபடி, கடந்த முப்பதுவருடங்களிலும் கிடைத்த ஆதாயத்தில் இரண்டுடலர்வீதம் எடுத்து இதுவரை ஆஸ்பத்திரிகளுக்கும், கலைச்சங்கங்களுக்கும், மற்றும் தருமஸ்தாபனங்களுக்கும் மூன்று கோடிடலர் உதவப்பட்டிருக்கிறது. தாம் மரணமடைந்து முப்பதுவருடங்களின்பின்னரே தமது இந்தத்தருமகாரியம்பற்றிய சம்பவம் வெளியிடப்படவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டபிரகாரம் சென்ற மாசிமாதம் 26-ந் திகதி அது பிரஸ்தாபமாயிருக்கிறது.

## அமெரிக்க புதியகப்பல்

அமெரிக்க ஐக்கியதேசத்திலே "யூனைற்றெட் ஸ்ரேற்ஸ்" எனும் நாமத்துடன் ஓர் புதிய பிரயாணக்கப்பல் கட்டிமுடிக்கப்படுகிறது. இதனைக் கட்டிமுடிக்க ஏற்பட்டுள்ள செலவு 7 கோடி டலராகும். இதன்நிறை 52,000 தொன் மாத்திரமே. ஆனுல், இது தற்போது உலகில் மகாதீவிரகெதியுடையதான குயீன்மேரி எனும் பிரித்தானியபாரியபிரயாணக்கப்பலையும் ஓட்டத்திலேதோற்கடித்துவிடுமென்று பெருமைபாராட்டப்படுகிறது. குயீன்மேரி என்ற கப்பலின்நிறை 81,235 தொன். இதனேடொத்த குயீன் எலிசபேத் என்ற கப்பலின்நிறை 83,673 தொன். ஆனுல், புதியஅமெரிக்க கப்பல் அவைகள்இரண்டிலும் நீளத்தில் கூடியதாகும். இதன்நீளம் 990 அடி. குயீன் எலிசபேத்தின்நீளம் 987அடி. குயீன்மேரியின்நீளம் 975 அடி. "யூனைற்றெட் ஸ்ரேற்ஸ்" என்ற கப்பல் அலுமீனியங்கொண்டும் கட்டப்பட்டிருப்பதே அதன் தீவிரகெதிக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

## பீரங்கிகள்மாத்திரம் போதாது

கனடாதேச வெளிநாட்டுமந்திரியான திரு. லெஸ்றர் பியேர்சன்அவர்கள் சென்றசனிக்கிழமை நியூயோர்க்நகரிலே கனடியசங்க விழாஒன்றில் பேசியபோது: "கம்யூனிஸ்த பலாத்காரமும், கொள்ளையும் நடைபெறும்போது பீரங்கிகள் உபயோகிக்கப்பட்டிருந்தபோதிலும் ஆசியாவிலேகம்யூனிஸம் பீரங்கிகளால்மாத்திரம் அழிக்கப்படமாட்டாது; அதன் உண்மைவேஷம் காணப்படும்போது, ஆசியர்களாலேயே அது அழிக்கப்படவேண்டும்; மேலைத்தேசங்கள்பொருளாதார-தொழில்நுட்ப உதவிகள் கொண்டு ஆசியநாடுகளிலுள்ள உண்மையான சனநாயக தேசியஅரசாங்கங்களுக்கு ஒத்தாசைசெய்வதாலும், அவைகளை ஊக்கப்படுத்துவதினுலும் ஆசியாவிலே கம்யூனிஸத்தைஅழிப்பதற்குத் துணைச் செய்யமுடியும்" எனக் கூறலாயினர்.

## பர்மியரும் பர்மா அரிசியும்

கொழும்பிலே நடந்தேறும் உதைபந்தாட்டப்போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு பர்மிய உதைபந்தாட்டக்கோஷ்டியினர் மூன்றுபிரிவாகச் சென்ற ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய மூன்றுதினங்களிலும் விமானமூலம் கொழும்புவந்து சேர்ந்தார்கள். ஆனுல் இவர்கள் வந்துசேருமுன்னமே இவர்களின் சாப்பாட்டுக்குத் தேவையான பர்மாஅரிசிமூடைகள் கொழும்பு வந்து சேரலாயின. ஆனுல், இந்த அரிசியில் யாதாமோர்விசேஷமும் கிடையாது. பர்மாவில் பாவிக்கப்படும் சாதாரணஅரிசிஇதுவாகும். இப்படியானகோஷ்டிகள் அங்கிருந்து வெளிநாடுகளுக்குச்செல்லும்போது தங்களுக்குத்தேவையான அரிசியையும் கொண்டுபோவது வழக்கமாகும்.

# நாஞசங்கதிகள்

— இந்திய அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களின் வேண்டுகோளுக்கிசைந்து, பரிசுத்தஸ்தானம் இந்தியாவின் பாதுகாவலராகப் பரிசுத்ததேவதாயாரை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தப்பாதுகாவலர் விழா தேவமாதாவின் மோட்சாரோபண திருநாளும், இந்திய சுதந்திர ஞாபக தினமுமாகிய ஆவணி மாதம் 15-ந் திகதியாகும்.

— ஜேர்மனியின் யுத்தத்துக்குமுந்திய வெளிநாட்டுக்கடன் 250 கோடிடலர்வரையிலாகும். அதன் யுத்தத்துக்குப் பிற்பட்ட வெளிநாட்டுக்கடன் 380கோடிடலர் வரையிலாகும். மொத்தமாகவுள்ள இந்த 630கோடி டலர் வெளிநாட்டுக்கடனையும் அறவிடும்விஷயமாய் 28நாடுகளைச்சேர்ந்த 150பிரதிநிதிகள்வரையில் லண்டன்நகரிலே இம்மாசமுதல் கூடிஆலோசித்து வருகின்றூர்கள்.

— ஆகாயவிமானிகளுக்கென்று நவமாகச் சர்வதேச ஆகாயப்பொதுப்பாஷைஒன்று அமெரிக்க விமான சேவைஅதிகாரிகளால் ஆக்கப்பட்டிருக்கிறது. இது ஆகாயவிமானிகள் ஒருவர்க்கொருவரும், விமானநிலயத்தில் இருப்பவர்களுடனும் பேசுதற்கான சொற்கள், தொடர்மொழிகளை அடக்கியுள்ளது. ஆங்கிலபாஷையிலே இது ஆக்கப்பட்டிருக்கிறது.

— தற்போது 65வயசுடைய ஓர்பெல்ஜியபோசிரியரும், இற்றைக்கு இருபதுவருடங்களின்முன் ஓர்பலூனிலே ஆகாயத்தில் உயரஎழுந்து பரமாணு மண்டலத்தை முதன்முதலாக அடைந்து உலகப்பிரசித்திபெற்றவருமான ஆகஸ்ற் பிக்காட்அவர்கள் சமீபத்திலே நேப்பிள்ஸ்நகருக்கப்பால் கடலின்கீழ் 9,000அடி ஆழத்துக்கு இறங்குதற்கான ஆயத்தங்கள்செய்து வருகின்றூர்.

— அர்ச். ஸ்நாபகயுவானியார் கன்னிகாசபையை அடியிட்டவரும், 1910-ம்ஆண்டு பரமபதம் அடைந்தவருமான வண. அல்போன்சோ மரியபுஸ்கோசுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கான விசாரணையைத் தொடக்கத் திருச்சடங்காசார திருச்சங்கம்அனுமதித்திருப்பதாய் றோமாபுரியிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

— காலஞ்சென்ற ஆருவதுஜோர்ஜ் அரசரின் பதினைந்துவருட ஆளுகை காலத்திலும் பிரித்தானியசாம்பிராச்சியத்திலே கத்தோலிக்கசனத்தொகை 1 கோடியே 85 லட்சம்பேரிலிருந்து 2கோடியே 45லட்சம்போராக அதிகரித்திருப்பதுடன், அக்காலத்திலே அநேக புதிய மேற்றிராசனங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

— ஐந்தாவதுஜோர்ஜ்அரசரின் மகுடதாரணவைபவத்திற்குச் சமுகமளிக்கும்படியாய் வத்திக்கான் தூதுக்கோஷ்டியுடன் அப்போது மொன்சிஞ்ஞோர் பச்செல்லிஎன அறிப்பட்டு 41வயசுடையவராயிருந்த பன்னிரண்டாம்பத்திநாதபாப்பரசர் சென்றபோது, காலஞ்சென்ற ஆரும்ஜோர்ஜ் அரசர் 16 வயசுடையவராயிருந்தார். அப்போதுதான் அவரைப்பாப்பரசர் தமது சீவியத்தில் ஒரேயொருமுறையே சந்தித்திருக்கின்றூர்.

# பொழுது போக்கு

டக்றர் — (நோயாளியை நோக்கி) தங்களுக்கு வந்திருக்கும்நோய் அவ்வளவு கடுமையும்அல்ல; உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ணக்கூடியதும் அல்ல; இந்தநோய்கண்ட நூறுபேரிலே இறக்கிறவர்கள் மூன்றுபேரே.

நோயாளி — (அங்கலாய்ப்புடன்) டக்றர், தயவுசெய்துசொல்லுங்கள். அப்படியானுல் அந்தமூன்றுபேரும் ஏற்கனவே இறந்துவிட்டார்களா?

* * *

வழிப்போக்கன் — ஐயா! தங்கள் குடையால் என்கண்ணில் குற்றிவிட்டீர்களே. அதைக் கவனமாகப் பிடித்துச்செல்லுங்கள்.

குடைக்காரர் — நீ சொல்வது முற்றுந்தவறு. இது என்னுடையகுடையென்று உனக்கு எப்படித்தெரியும்? இது அடுத்தவீட்டுக்காரனின் குடையல்லவா?

* * *

போசிரியர் — (தமதுமருமகனின் கணித அறிவைப் பரீட்சித்தறிய விரும்பி) தம்பி, ஒருபட்டிக்குள் 20 செம்மறியாடுகள் நின்றன. அவற்றில் ஒன்று வேலியால்பாய்ந்து வெளியே போய்விட்டது. பிறகு பட்டிக்குள் எத்தனை இருக்கும்?

மருமகன் — (சொல்லத்தெரியாமல் திருகவிழிக்கிருன்)

போசிரியர் — இங்கேவா தம்பி! மீதியாய்ப் 19 இருக்குமென்று உனக்குத்தெரியாதா?

மருமகன் — சரிதான் மாமா! கணக்கைப்பற்றித் தங்களுக்கு விளங்கும். ஆனுல், செம்மறியாட்டைப்பற்றி எனக்குக் கொஞ்சம்விளங்கும். ஒரு செம்மறியாடு வேலியால்பாய்ந்து வெளியே போனுல், மற்றவைகளும் பாய்ந்துகொண்டு அதன்பிறகேசென்றுவிடும் மாமா!

* * *

டக்றர் — (நோயாளியை உற்சாகப்படுத்துமாறு) ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். உள்ளபடியேநோய் அபாயத்துக்குரியதல்ல. இந்தநோய்எனக்கும் முந்திவந்திருக்கிறது. நான் சுகப்பட்டேன்.

நோயாளி — ஆம், தங்களுக்குவந்திருக்கலாம். ஆனுல், தங்களுக்கு வைத்தியஞ்செய்தவர் தாங்கள் அல்லவே.

* * *

தனது தோட்டத்திலே பையன்ஒருவன் மாம்பழங்கள் திருடிக் கொண்டிருக்கும்போது தோட்டக்காரன் அவனைக்கண்டுபிடித்துப் பொலிஸரிடம் கையளித்துவிட்டான். அவன்மீது பொலிஸர் தொடர்ந்தவழக்கிலே

நீதிபதி — (பையனைப்பார்த்து) இது முதலாம் முறையாகையால் உன்னைவிடுதலைசெய்கிறேன்; ஆனுல், இனிமேல் இப்படியான சோதனைகளுக்கு இடங்கொடுக்கப்படாது; பிசாசு இப்படிப்பட்ட சோதனையை உண்டுபண்ணும் போது கிட்டநில்லாமல் பாய்ந்தோடித் தப்பிக்கொள்ள வேண்டும்; கவனம், தெரியுமா?

பையன் — ஐயா! நான் அப்படிச் செய்யவே முயன்றேன். ஆனுல், வேலியைப் பாய்ந்து ஓடித்தப்புவதற்குமுன் அந்தத்தோட்டக்காரப்பிசாசு என்னைப் பிடித்துவிட்டது.

* * *

— நிகழும் 1952-ம் ஆண்டின் அரசிறைவருடத்திலே சோவியற்அரசின் செலவுத்திட்டத்திற்கென விடப்பட்டிருக்கும்பணம் 47,690கோடிறூபிள். இதிலே 11,380கோடிறூபிள், அதாவதுமுழுச்செலவிலும் நூற்றுக்கு23·8 வீதமானபணம் அதன் இராணுவசெலவிற்கென விடப்பட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இத்தொகை முந்தியவருடத்திலும் நூற்றுக்குப் 18விகிதம் அதிகமானதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சோதரங்களே!

நாங்கள் பழகிக்கொள்ள வேண்டிய நற்பழக்க வழக்கங்களில் நன்றியறிதலும் ஒன்று. எங்கள் நன்றி யாருக்கு உரியது? முந்தமுந்தச் சருவேசுரனுக்கே உரியது. ஏனெனில், அவர் எங்களை உண்டாக்கி அபரிமிதமான நன்மைகளைச் செய்துகொண்டு வருகிறார்.

அவருக்குப்பின் எங்கள் பெற்றோருக்கு நன்றியறிதல் காண்பிக்க வேண்டும். எங்கள் தகப்பன் உங்களை அதிகம் நேசிக்கிறார். உங்களுக்காக மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கிறார். உங்கள் துன்பங்களில் உற்றதுணையாய் இருக்கிறார். உங்கள் படிப்பில் சிரத்தை எடுக்கிறார். யாவற்றிலும் உங்கள் நன்மையையே விரும்புகிறார், தேடுகிறார்.

அவர் செய்யும் நன்மைகளை நினைத்து, அவர் உங்களுக்குக் காட்டும் அன்பை நினைத்து அவரை நேசித்து நன்றி காட்டுங்கள். அதை எப்படிக் காட்ட வேண்டும்? எத்தினம் அதற்கு ஏற்றது? என்ன செய்ய வேண்டும்? என்று விபரமாய் இப்பக்கத்தில் சொல்லியிருக்கிறது. அதை வாசித்து அனுசரிப்பீர்களாக. சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணா

## சூசையப்பர்

1

திருச்சபை என்ற செடிவளரத்
தினமும் தண்ணீர் தெளிப்பவரே!
வரப்பிர சாத மழைமுகிலே!
வந்தோம் உமது அடைக்கலமே!

2

வாடிய ஒருதடி பூத்திடவும்
வள்ளலை அனுதினம் காத்திடவும்
தேடிய வரங்களைத் தந்திடவும்
திருச்சுதன் அளித்தார் துறப்பன்றோ?

3

பாலனை அணைத்த கையொன்றால்
பாவியைத் தொடவோர் வரந்தருவாய்
ஆலையிற் கரும்பென நசிகின்றோம்
ஆறுதல் வேறுயார் அப்பரன்றோ!

4

'பட்டினி' என்று கொடுங்குரல்கள்
பலதிசை இருந்து குமுறுவதேன்?
மட்டிலா வளனைச் சரணடைந்தால்
வையகம் வறுமையில் உய்யுமன்றோ?

— அமுது

## அர்ச். சூசையப்பர்

குழந்தை யேசுநாதருக்கும், தேவமாதாவாகிய கன்னி மரியம்மாளுக்கும் துணையாகவும், காவலாகவும் சர்வேசுரன் அர்ச். சூசையப்பரைத் தெரிந்தார். சூசையப்பர் சுவிசேஷத்தில் "நீதிமான்" அதாவது பரிசுத்தர் என்று கூறப்படுகின்றார். சூசையப்பர் தாழ்மை மிகுந்தவர். அவர் மகிமை பெருமைகளைத் தேடினாரில்லை. ஆனால், சர்வேசுரன் அவரை மகிமைப்படுத்தினார்.

யேசுநாதர் அவரைத் தந்தை என்று அழைத்து, அவரில் நம்பிக்கை வைத்து, அவரை நேசித்துச் சங்கை பண்ணி, அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்.

அர்ச். கன்னி மரியம்மாள் அவரைத் தம்முடைய பிரிய பத்தாவாகச் சங்கித்துத்தமக்கும், தமது குழந்தைக்கும் செய்துவரும் நன்மை உபகாரங்களுக்கெல்லாம் நன்றி காட்டி, நேசித்து வருவார்.

அர்ச். சூசையப்பர் பல துன்பங்களைச் சகிக்க வேண்டியிருந்தது. ஓர் வேளை சந்தேகத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். தேவசுதன் பிறக்கும் இடமாக மாட்டுத் தொழுவத்தைத் தேடவேண்டியிருந்தபொழுது அது அவருக்கு எவ்வளவு மனவருத்தமாய் இருந்திருக்கும்? ஏரோதுக்குப் பயந்து எகிப்துக்கு ஓடவேண்டியிருந்த பொழுதும், அந்த அந்நிய ஊரில் — பொய்த் தெய்வங்களை ஆராதித்த ஊரில், தேவகுமாரன் புகலிடம் தேடவேண்டியிருந்த பொழுதும், பின் நசரேத்திற்கு வந்து சீவித்த காலத்திலும் அர்ச். சூசையப்பர் அநேக கஷ்டங்களை அனுபவித்தார்.

ஆகையால்தான் அர்ச். சூசையப்பர் குடும்பத் தலைவர்களுக்கு, உங்கள் தகப்பன்மார்களுக்கு ஓர் மேல்வரிச் சட்டமாய் விளங்குகிறார்.

பிள்ளைகளே! உங்கள் தகப்பன்மார் உங்களுக்குச் செய்யும் நன்மை உபகாரங்களைக் கவனித்தீர்களா? அவர்கள் ஏதோ ஒருமுயற்சி செய்து உங்களைப் போஷிப்பதற்கும், குடும்ப சம்ரக்ஷணைக்கும் வேண்டியவற்றைத் தேடுகிறார்கள். சிலர் வியாபார முயற்சியில் முதலிட்டிருக்கிறார்கள். வேறுசிலர் அரசாட்சியில் உத்தியோகம் பார்க்கிறார்கள். தங்கள் சரீரத்தைப் பிழிந்தோ அல்லது முதலையிட்டோ வேலை செய்து உழைக்கிறார்கள். இதெல்லாம் யாருக்காக? உங்களுக்காக அல்லவோ?

உங்களுக்கு உணவு, உடை, படிப்பதற்குப் புத்தகங்கள், விளையாட்டுப் பொருட்கள், வியாதி வருத்தம் வந்தால் மருந்து, இன்னும் அநேக நன்மைகள், இதெல்லா வற்றையும் செய்யும்படி அவர்களைத் தூண்டுவது என்ன? உங்கள் மட்டிலே அவர்களிடமுள்ள நேசம் அல்லவா? இதெல்லாவற்றிற்கும் என்ன கைமாறு செய்கிறீர்கள்? நன்றி காண்பிக்கிறீர்களா?

ஆம்! நீங்கள் அவர்களை நேசிக்கும்பொழுது, அவர்களைக் கனம்பண்ணி அவர்களுக்குக் கீழ்ப்படியும் பொழுது நன்றி காட்டுகிறீர்கள். பிள்ளைகள் எல்லாரும் இப்படிச் செய்கிறார்களா? செய்யாதவர்களும் உண்டு.

பிள்ளைகளே! இந்தமாதம் 19-ம் திகதி அர்ச். சூசையப்பர் திருநாள். அத்தினத்தைத் தகப்பன்மார் தினமாக அனுசரியுங்கள். உங்கள் தகப்பன்மாருக்கு நன்றி காட்டும் நோக்கத்துடன் திவ்விய பூசை கண்டு, நன்மை உட்கொள்ளுங்கள். தகப்பன்மாரையும் கூடக் கோவிலுக்குக் கூட்டிக் கொண்டு போங்கள். வீட்டில் ஓர் கொண்டாட்டம் வையுங்கள். ஆடுங்கள். பாடுங்கள். அப்பாவுக்கு அன்பு முத்தம் கொடுங்கள். அப்பா உத்தியோகமாக வேறிடம் இருந்தால் ஓர் கடிதம் எழுதி உங்கள் நன்றியைத் தெரிவியுங்கள். சருவேசுரன் உங்களுக்கு நல்ல தகப்பன்மாரைத் தருவாராக.

## "அதுதான்நல்லது" என்றகதைமுடிவு 2-ம் பரிசு பெற்றது

"அம்மா! இங்கேபார், மோதிரம்!"—என்று வாசலில் நின்ற தாயிடம் பெருமையோடு காட்டினான் ஞானசேகரன்.

"வாங்காதே யம்மா! அது வழியிற் கிடந்தது. உடையவரிடம் கொடுத்துவிட வேண்டும்."— புஷ்பராணியின் கட்டளை இது.

"ஏன்? நான் என்ன திருடினேனா?"

"இது உன் பொருளா? பிறர் பொருளுக்கு ஆசைப் படாதே."

"பிறர் பொருள் என்றதற்காகக் கண்டதை எடுக்காமல் விடுவதா?"

"யார் அப்படிச் சொன்னது? எடு. உடையவரிடம் கொடு."

"அடே! வேறு வேலையில்லாமல் தேடிக் கொடுக்க வேண்டுமோ? நல்லாயிருக்கு."

"சீ! மற்றவர் பொருளுக்கு ஆசைப்பட உனக்கு வெட்கமாய் இல்லையா?"

"அப்போ எறியட்டுமா?"

"வேண்டாம். கோவில் சுவாமியாரிடம் கொடு. அவர் உரியவரிடம் சேர்ப்பார்."

"சேர்க்க முடியா விட்டால்?"

"யாராவது ஏழைகளுக்கு உதவும்." ஞான சேகரன் சிந்தித்தான்.

"அம்மா நீ என்ன சொல்லுகிறாய்?"

"அக்கா சொன்னாளே, அதுதான் நல்லது."

"அப்போ வா அக்கா நாம் முதலில் சுவாமியாரிடம் சேர்ப்போம்."

கோவிலை நோக்கிப் போகும் மக்களைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள் தாய். அவள் வாய், "அதுதான் நல்லது" என்று முணுமுணுத்தது.

சூ. கிப்போலிற்று
காம்பன்.

## கைகாட்டி வெளிச்சம்

ஜேம்ஸ் என்பவனும், அவனுடைய தந்தையும் வீதியிற் போய்க்கொண்டிருந்தனர். ஒரு சந்தியில் இரண்டு மோட்டர் கார்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டன. சிறிதுநேரத்தில் திரளான சனங்கள் அவ்விடத்திற் கூடினர். இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்த ஜேம்ஸ் தந்தையை நோக்கி: "அப்பா! இரண்டு மோட்டர் கார்களிலும் இருந்தவர்கள் பலத்த காயம் அடைந்து விட்டார்கள். இதற்கு அந்தக் கைகாட்டி வெளிச்சத்தைக் (Traffic Light) கவனியாது சென்ற சாரதி தானே காரணம்? அந்த முட்டாளைக் கடுமையாகத் தண்டிப்பார்கள் அல்லவா?"

தந்தை :- கட்டாயம்தண்டிக்கப்படுவான். எங்கள் அனைவரிடமும் இது போன்ற கைகாட்டி வெளிச்சம் உண்டு. தவறுவோர் யாவரும்தண்டிக்கப்படுவர்.

ஜேம்ஸ் :- அப்பா! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே.

தந் :- எங்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் இந்தக் கைகாட்டி வெளிச்சம் உண்டு என்கிறேன்.

ஜேம்ஸ் :- நான் ஒருநாளும் அவற்றைக் காணவில்லையே.

தந் :- நம்முள் இருக்கும் கைகாட்டிக்கு மனச்சாட்சி என்று பெயர். அதன்படி நாம் நடந்தால் ஒருபோதும் இடர்ப்பட மாட்டோம். தவறினால் இன்று கண்ட காட்சிபோல் நாமும் இடர்ப்பட நேரும். மனிதர்கள் சில சமயங்களில் ஆண்டவருடைய கட்டளைகளை மனச்சாட்சியாகிய கைகாட்டி சுட்டிக் காட்டியும் மீறுகின்றனர். அதனால் பாவத்தைச் செய்கின்றனர்.

ஜேம்ஸ் - மனச் சாட்சிக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்?

தந் :- "நீ எப்பொழுது உன் மனச்சாட்சியை மீறாது அதன்படி நடக்கின்றாயோ அப்பொழுதுதான் நீ ஆண்டவரின் கட்டளைகளை நிறைவேற்றுவாய்" என்று கடவுளின் ஒளியாகிய வேதாகமம் கூறுகின்றது.

ஜேம்ஸ் :- ஓ! அப்படியென்றால் அந்த வெளிச்சம் எங்கிருந்து வருகின்றது?

தந் :- ஓர் ஞானவெளிச்சமாகிய அது எங்களுக்கு ஆண்டவராலே தரப்படுகின்றது.

ஜேம்ஸ்:-ஆண்டவர்தரும் அந்த ஞான வெளிச்சத்தை நீங்கி ஒருபோதும் அறியாமை இருளிற் போகமாட்டேன் அப்பா!

தந் :- ஆம் நீ போக மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஞானஒளியினின்றும் தவறிய சிறுமி ஒருத்தியின் கதையைக் கேள்: ஒருநாள் சிறுமி ஒருவள் வீட்டில் தன் அன்னை இல்லாத நேரத்தில் அங்கு இருந்த மாம்பழம் ஒன்றைத் திருட எண்ணி அலமாரியண்டை சென்றாள். ஆனால், அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த திரு இருதயப் படம் அவள் கண்களிற் பட்டது. அப்படத்தில் உள்ள யேசுநாதர் அவளை உற்று நோக்கியது போற் தோன்றவே, அவள் அச்சத்தால் அறையில் நின்றும் நீங்கினள். ஆனால், அவள் ஆசை அகலவில்லை. மீண்டும் மீண்டும் அந்தஅறைக்குள் சென்றாள். ஆனால், அக்கண்கள் "நீ பழத்தை எடுத்தால் தேவ கட்டளையை மீறியவள் ஆவாய்" என்று எச்சரிப்பதுபோற் தோன்றியது. ஆனால், அப்பெண்ணின் ஆசை ஞானவெளிச்சத்தை மறைத்தது. அவள் அப்படத்தைக் கிழித்தெறிந்துவிட்டுப் பழத்தை எடுத்தாள்.

ஜேம்ஸ்:- ஐயோ! அப்பா!! அப்படிச் செய்தாளா? பின்பு!

தந் :- அவள் பழத்தை எடுப்பதற்கும், தாயார் அறைக்குள் நுழைவதற்கும் சரியாய் இருந்தது.

ஜேம்ஸ் :- பிறகு என்ன நடந்தது?

தந் :- என்ன நடக்கும்? வீதியில் மோட்டர் காருக்கு என்ன நேர்ந்தது? வழிகாட்டியை மீறினால் வருவது ஆபத்துத் தானே. இப்போது அவள் இரட்டைக் குற்றவாளி, கடுமையாகத்தண்டிக்கப்பட்டாள்.

(சரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிப்பின் வழியாகச் சீரான வாழ்க்கை

யாழ்ப்பாணத்திலே காலை 9 மணிக்கு ஆகாயவிமானத்தில் ஏறிஉட்கார்ந்தால் 10 மணிக்கு 250 மைலுக்கு அப்பாலுள்ளகொழும்பை அடைகின்றோம். பல்லாயிரம்மைல் தூரத்துக்கு அப்பாலிருந்து ஒருவர் வானொலியிற் பேசுகின்றார். அதே நிமிடத்தில் எம்வீட்டிலுள்ள சாய்வு நாற்காலியில் நாம் உல்லாசமாக இருந்தவண்ணம் அதைக் கேட்கின்றோம். இவ்வாறு வளர்ச்சியுற்றுவரும் சமூகத்தில் தனிமனிதனும் வாழவேண்டியவனாகின்றான். இந்நிலையிற் செல்வாக்குள்ளவன் வாழ்க்கை வசதிகளைச் சரிவர அனுபவித்துச் சுகித்துவாழுகின்றான். செல்வாக்கு அற்றவன் செய்வதறியாது திகைக்கின்றான். சமூகவளர்ச்சி பெருகிச்செல்லுகின்ற வேகத்துடன் தனிமனிதனின் வாழ்க்கைத்தரமும் உயர்ந்தாக வேண்டும் அல்லவா?

சமூகம் வளருவதற்கேற்ப அரசாங்கம் பெரும்பொறுப்பு ஏற்றுவருவதை நாம் காண்கின்றோம். சமூகத்தை வளரச் செய்வதற்குப் பணம் அத்தியாவசியமாகின்றது. பணத்தை இருவழியாகப் பெற்றுக்கொள்ளலாம். ஒன்று, வெளிநாட்டுமுதல். மற்றது, உள்நாட்டு முதல். இலங்கையின் செல்வநிலையைச் சற்றுக்கவனிப்போம். இன்று இலங்கையில் தேயிலை 5,53,000 ஏக்கரிலும், றப்பர் 573,000 ஏக்கரிலும், தென்னை 4,20,000 ஏக்கரிலும் விளைகின்றன. இம்மூன்று பொருள்களிலுமே இலங்கை இன்று செல்வவளம்பெற்று வருகின்றது. இந்நிலை என்றும் ஒரேதன்மைத்தாக இருக்குமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அசாம் முதலிய நாடுகளில் தேயிலை உற்பத்தி பெருகிக்கொண்டு செல்லுகின்றது. பிலிப்பைன் தீவுகள் தென்னைப்பொருள்களைப் பெருக்கிக்கொள்கின்றன. ஆகவே, இலங்கையின் பொருளாதாரநிலை சீரானமுறையில் வளர்ந்துகொண்டு வரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இன்று அரசாங்கம் இம்மூன்று பொருள்களையும் ஆதாரமாகக்கொண்டே இலவசக்கல்வியிலும், சமூகசேவைகளிலும் ஏராளமான பணத்தைச் செலவுசெய்து வருகின்றது.

பிறநாட்டு முதலை எம்முடைய நாட்டிற்செலுத்தி, அதனாலேபெற்ற ஊதியத்தைக்கொண்டு நாட்டைவளஞ்செய்தல் வரவேற்கக்கூடிய தொன்றன்று. இன்றைக்கு இலங்கையிலுள்ள ஒரு சாதாரண மனிதனின் சராசரிவருமானம் ரூபா முப்பதாகும். எனவே, பிறநாட்டுப் பணத்தை நம்பிவாழாது எம்மாலானவற்றை நாமும் செய்யமுன்வர வேண்டும். மக்கள் இடாம்பீகமாக வாழப் பழகிக்கொண்டால் பொருளாதாரநிலையின் பெருக்கத்திற்கு முட்டுக்கட்டை போட்டுவிடுகின்றார்கள். மக்கள் ஏன்சேமிக்கவேண்டும்என்பதற்குச் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் கூறுவதாவது.

(1) உத்தியோகத்திலிருந்து இளைப்பாறியபின் உதவுவதற்கு. (2) பிள்ளைகளின் கல்விவளர்ச்சிக்கு உபயோகப்படுத்துவதற்கு. (3) பிள்ளைகளின் விவாகத்திற்கும், அதனுடன் தொடர்பான செலவுகளுக்கும். (4) எதிர்பாராதவிதமாக ஏற்படும் நோய்துன்பம், இடையூறுகளைக் தடுப்பதற்கு. (5) வேலையில்லாத் திண்டாட்டகாலங்களில் வாழ்க்கையைச் செவ்வனே கழிப்பதற்கு. (6) உழைப்பாளி இறந்தபின் அவனுடைய குடும்பம் தத்தளியாது வாழுவதற்கு

றொக்வெல்லர் என்ற அமெரிக்க தனவந்தனின் வாழ்க்கைவரலாறு எம்மையெல்லாம் சேமிக்குமாறு தூண்டுகின்றது. இவர் நெற்றிவியர்வை நிலத்திற்சிந்தக் கிழமைஒன்றுக்கு ஓயாது வேலைசெய்து பெற்றசம்பளம் 10 சிலிங்காகும். அன்று அவருக்குச் சேமிப்பின் அவசியம் நன்றாகத் தெரிந்திருந்தது. அதனால் தமது சம்பளத்தில் பத்துச்சதவிகிதத்தைச் சேமித்துவந்தார். ஆகவே தான் இன்று அவர் அமெரிக்காவில் பெரியதனவந்தராக வாழுகின்றார்.

எறும்புகள்கூட மழைகாலத்துக்கென உணவைச்சேமித்து வருகின்றன. சேமிக்கப் பழகிக்கொள்வதுடன் சேமித்தபணத்தைக் கூடுதலான வட்டியைநம்பிப் பிறரிடங்கொடுத்துவிடக்கூடாது. பிறர்கையிற் பணத்தைக் கொடுப்பதால் அதிகவட்டியை நாம் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் பணம் முழுவதும் திரும்பிவந்து சேருமென்பது சந்தேகம். பிறரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு இறுதியில் ஏமாற்றமடைந்த பலரை நாம் எம் வாழ்க்கையிற் கண்டுள்ளோம். ஆனால், அரசாங்கத்திடம் நாம் கொடுக்கும் பணம் என்றைக்கும் உத்தரவாதமுடையது. ஆகவே, சேமித்தபணத்தை அரசாங்கத்திடமே பாதுகாத்துத் தருமாறு ஒப்படைக்க வேண்டும்.

இங்ஙனம் நாங்கள் சேமித்தபணம் எம்முடைய வருங்கால வாழ்க்கையைக் குதூகலமாகக் கழிப்பதற்கு உதவுவதோடு அரசாங்கமும் அப்பணத்தைப் பெற்று எங்களுடைய வாழ்க்கைவசதிகள் எல்லாவற்றையும் உயர்த்துகின்றது. முதலாவதாக, எம்முடைய பணம் வெளிநாட்டுக்குப் போகாமல் தடுக்கப்படுகின்றது. இரண்டாவதாக, கமத்தொழிற் பெருக்கத்திற்கும், கைத்தொழில்விருத்திக்கும் முதலீடுசெய்யப்பட்டு, எல்லாவிதமான சமூகசேவைகள் பெருகவும் உதவிபுரிகின்றன. மூன்றாவதாக தேவையான பொருள்களை அரசாங்கம் விநியோகம் செய்வதாற் கள்ளச்சந்தையில் அமோகமான இலாபமடையும்வியாபாரியை விரட்டியடித்து ஓட்டமுடிகின்றது. அரசாங்கம் தனக்குத் தேவையான பணத்தைப் பொது மக்களிடமிருந்து வரியிட்டுப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், அரசாங்கம் அவ்வழியைவிடுத்து அனைவரும் வரவேற்கக்கூடியதாகிய தேசியசேமிப்பு இயக்கத்தின்வழியாகப் பணம் பெற முன்வருகின்றது. ஒவ்வொருவரும் சேமிக்கப்பழகினால் அவர்களுக்கு இறுதியில் அது பெருந்தொகையாகின்றது.

இன்னுமொன்று: தனிமனிதன் சுகித்துவாழ விரும்பினால்—அவன் சமூகம் விஞ்ஞானத்திலும், கலைவளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் உன்னதநிலையை அடையவிரும்பினால்—சுதந்திர இலங்கை பிறநாட்டுமக்களுடன் எவ்விஷயத்திலும் தோளொடுதோள் கொண்டு நிமிர்ந்துநிற்க விரும்பினால் இலங்கை வாழ்மக்கள் ஒவ்வொருவரும் சேமிக்கவேண்டும்; சேமித்தபணத்தை அரசாங்கத்தின்கையில் ஒப்படைக்க வேண்டும்; அரசாங்கத்திடம் நாம் ஒப்படைக்கும் ஒவ்வொருசதமும் எம்மை வாழவழிகாட்டும் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

சே. தனபாலசிங்கம்
[தேசீயசேமிப்பு மேற்பார்வையாளர்]

—கருதினல்சபியோகா, கருதினல் டகேட்ரினனும் இருகருதினல்மாரையும்தவிரச் சென்ற 1951-ம் ஆண்டிலே 76 மேற்றிராணிமாரும், அதிமேற்றிராணிமாரும் காலஞ்சென்றிருக்கிறார்கள் என்று சமீபத்திலேவெளியான வத்திக்கான் அறிக்கைப் புத்தகம் தெரிவிக்கிறது.

## கச்சதீவு
## அர்ச். அந்தோனியார் திருநாள்
## 23—3—52

இத்திருநாள் பங்குனிமாதம் 20-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவாகும். யாத்திரிகரின் ஞானக்கடமைகளைக் கவனிப்பதற்கு வண. கட்டளைச் சுவாமியார் திருப்பதியில் இருப்பார்.

[1] 18-3-52 செவ்வாய்க்கிழமை நெடுந்தீவிலே வத்தைகள் தண்ணீர் ஏற்றும்பொழுது யாத்திரிகர்களும் தங்கள் உணவுப்பொருட்களை ஏற்றிக்கொள்ளவேண்டும்.

[2] 19-3-52 புதன்கிழமை வத்தைகள் வழக்கம்போல் நெடுந்தீவுப் பெரியதுறையிலிருந்து யாத்திரையை ஆரம்பிக்கும்.

[3] 21-3-52 வெள்ளிக்கிழமைமாலை திருப்பாதைச் சுற்றுப்பிரகாரமும், திருமணித்தியாலமும் நடைபெறும்.

[4] யாத்திரிகர்கள்யாவரும் யாத்திரைத்தலத்தில் ஒழுங்குசெய்துள்ள சுகாதாரவிதிகளுக்கமைய நடக்கும்வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கட்டளைக்குரவர்
நெடுந்தீவு

## பாலைதீவு
## அர்ச். அந்தோனியார் திருநாள்
## 16—3—52.



இத்திருநாள் மகோற்சவம் பங்குனிமாதம் 11-ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும். 15-ந்திகதி சனிக்கிழமை அர்ச். அந்தோனியார் திருச்சுரூபம் வீதிகொண்டு சுற்றுப்பிரகாரம் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை 4-30 மணி தொடக்கம் திவ்வியபூசைகள் நிறைவேறும். யாத்திரிகரின் ஞானக்கடமைகளைக் கவனிப்பதற்குப் பலகுருப்பிரசாதிகள் திருப்பதியிலே சமுகமாயிருப்பார்கள்.

1. பெரியகடல் லைசென்சுள்ள மோட்டர்லாஞ்சுகளுக்கு மாத்திரம் பாலைதீவுக்குப் பிரயாணஞ்செய்ய லைசென்ஸ் கொடுக்கப்படும்.
2. **வத்தைகளிலும், மோட்டர் லாஞ்சுகளிலும் லைசென்ஸின்படி பிரயாணிகளை ஏற்றவேண்டும்.**
3. தண்ணீர் குறைவாயிருப்பதினால் கூடியளவு வத்தைக்காரரும், யாத்திரிகரும் தண்ணீர்கொண்டுபோகக் கடவார்கள்.
4. **செபமாலைக்கடைகளும், தேநீர்—உணவுக்கடைகளும் மாத்திரமே கட்டலாம்.**
5. சென்றவருடங்களில் நடைபெற்றமாதிரி—மெழுகுதிரிகள் கட்டளைச் சுவாமியாருடைய கடையில் மாத்திரம் விற்கப்படும்.
6. கடைகட்டவிரும்புகிறவர்கள் கட்டளைச்சுவாமியாரிடம் உத்தரவு கேட்கவேண்டும். தின்பண்டங்களைக் கண்ணாடிப்பெட்டிகளில் வைத்துக்காப்பாற்றவேண்டும்.

**இந்தக்கட்டளைக்கு அமையாதவர்களின் பொருட்கள் இவ்வருடமுதல் பறிமுதலாக்கப்படும்.**

### துக்கப்பாடற்பூசை

பலவருடகாலமாகப் பாலைதீவ யாத்திரிகருக்கு வெவ்வேறு உதவிகள் புரிந்துவந்தவர்களான திரு. மோசேஸ் மூப்பரினதும், திரு. தம்புக்குட்டிமூப்பரினதும், ஏனையஉபகாரிகளினதும் ஆன்மஇளைப்பாற்றிக்காகப் 15-ந்திகதி சனிக்கிழமைகாலை 6-30 மணிக்கு ஓர் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

கட்டளைக்குரவர்


## விளம்பரம்

பனங்கட்டிக்கோட்டு வாசிகளே!

உங்களுக்குத் தேவையான சகலவித சில்லறை, பலசரக்கு, சாய்ப்புச்சாமான், மற்றும் சாமான்களை உங்களுக்கு அருகாமையில் இருக்கும் எம்மிடம் வந்து வாங்குங்கள்.

மி. செபமாலை அன் முத்துராஜா
பனங்கட்டிக்கொட்டு,
மன்னார்.


## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பாத்திமா செபமாலைமாதாவின் அனுக்கிரகத்தாலும், சோடியற்புதரான அர்ச். அந்தோனியாரின் சலிகையாலும் என்னைப்பீடித்து வ த்தியபிணிகள் குணமாயின. எப்போதும் இவர்களின் தயவு எனக்குக்கிடைக்க வேண்டுகின்றேன். இவர்கள் இரக்கம்நிறைந்த யேசுவின் திரு இருதயத்தினிடம் எனக்குவேண்டிய நன்மைகளையும் பெற்றுத்தருமாறு வேண்டி ஸ்தோத்திரம்சொல்லுகிறேன்.

J. S.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 13-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org